காலை முரசு

பக்கங்கள் - 28

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 07 வெள்ளிக்கிழமை 24.10.2025 | அதிர்வு 85

## யாழில் ஒரே நாளில் போதைப்பொருளுடன் 14 பேர் சிக்கினார்கள்!

(ந.லோகதயாளன்)



யாழ். குடாநாட்டில் ஒரே நாளில் 14 பேர் போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். 04▶



# அடுத்த வாரத்தில் சஜித் புதுடில்லி பயணமாகிறார்

## நான்கு நாள் விஜயமாக

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நான்கு நாள் விஜயமாக நவம்பர் முதல் வாரத்தில் புதுடில்லி செல்கின்றார் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

தம்மோடு வேறு பிரதிநிதிகள் குழுவைக் கூட்டிச் செல்லாமல், எதிர்க்கட்சித் தலைவர் தனித்து புதுடில்லி செல்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு இந்திய உயர்மட்டத் தலைவர்களோடு அவர் பல சுற்றுப் பேச்சுகளில் ஈடுபடுவார் என்றும் தெரிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பின்னர் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரைப் புதுடில்லிக்கு அழைத்துப் பேசிய இந்திய அரசு, இப்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இந்தியாவுக்கு அழைத்திருப்பது முக்கிய விடயமாகப் பேசப்படுகின்றது.


# மாகாண சபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு நாடாளுமன்றமே பொறுப்பு

## எம் மீது குற்றம் சுமத்த வேண்டாம் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு



“மாகாண சபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும், அதற்கான பொறுப்பை நாடாளுமன்றமே ஏற்க வேண்டும். பொறுத்தமான முறைமையை நாடாளுமன்றம் தேர்வு செய்தால், எந்தச் சந்தர்ப்பத்திலும் மாகாண சபைத் தேர்தலை எம்மால் 04▶

# செவ்வந்தி தப்பிச் செல்லப் பயன்படுத்திய யாழ். ஆனந்தனின் மீன்பிடிப் படகும் மீட்பு!



(ந.லோகதயாளன்)

பாதாள உலகக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ படுகொலையின் சூத்திரதாரி இஷாரா செவ்வந்தி இலங்கையில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதற்கு பயன்படுத்திய படகு யாழ்ப்பாணத்தில் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

தெற்கில் இருந்து வடக்குக்குத் தப்பி வந்து கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் தலைமறைவாக இருந்த செவ்வந்தி, இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த சில தினங்களில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 04▶




எது நடக்கும் என்று கோடி காட்டினேனோ அதுவே நடந்திருக்கின்றது.

அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் ஆற்றுகின்ற செயற்பாட்டை ஒட்டி எதிர்க்கட்சிகள் தரப்பில் இருந்து நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருப்பதும், அதனை நாடாளுமன்ற சிறப்புரிமை விசாரணை குழுவிடம் ஒப்படைக்க சபாநாயகர் தீர்மானித்திருப்பது பற்றியும் வெளியாகியிருக்கும் செய்தியை ஒட்டித்தான் இவ்வாறு குறிப்பிடுகின்றேன்.

சரியாகப் பத்து நாள்களுக்கு முன் - கடந்த 14 ஆம் திகதி - இழப்பீட்டு ஆணை குழுவுக்கு நால்வரை நியமிப்பது தொடர்பான விடயத்தில் சிறிதரனும் சேர்ந்து நடந்து கொண்ட முறைமை குறித்து என் அன்றைய பத்தியில் குறிப்பிட்டு இருந்தேன். அதன் முடிவு - முத்தாய்ப்பு - பின் வருமாறு அமைந்திருந்தது:- 03▶





# சிறிதரனின் நடத்தை பெரும் தார்மீக ஊழல்

## நாடாளுமன்றத்தில் சாமர சம்பத் காட்டம்

அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினராக உள்ள எஸ்.சிறிதரன் எம்.பியின் நடத்தை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் ஒரு நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினையில் கடுமையான கவலைகளை எழுப்பினார்.

அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினராக உள்ள ஸ்ரீதரன், தனக்கு எதிராக நிலுவையில் உள்ள லஞ்ச குற்றச்சாட்டுகளை வெளியிடத் தவறிவிட்டார் என்றும், வெளிப்படைத்தன்மை, சுதந்திரம் மற்றும் நெறிமுறை நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஓர் அமைப்பான அரசமைப்புக் கவுன்ஸில் பணியாற்ற அவரது நேர்மை மற்றும் தகுதி குறித்து கேள்விகளை எழுப்பும் ஒரு பெரிய ஒழுக்கவீனம் இது என்றும் சாமர சம்பத் கூறினார்.

பொறுப்புக்கூறலில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்ட வெளிப்படையான பிரதிபலன் ஏற்பாடுகளில் சிறிதரன் தொடர்ந்து அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

"சிறுபான்மை எதிர்க்கட்சிகளால் அவர் பரிந்துரைக்கப்பட்ட போதிலும், அரசாங்க நலன்களுடன் அவர் இணைந்து செயல்படுவது, அவர் மீது வைக்கப்பட்டுள்ள கூட்டு நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது மற்றும் அவர் பிரதிநிதித்துவப்படுத்த நிய மிக்கப்பட்டவர்களின் விருப்பத்தை காட்டிக் கொடுக்கிறது" என்று சாமர சம்பத் கூறினார்.

சிறிதரனின் நடத்தை, எதிர்க்கட்சிகளின் ஒருமித்த கருத்தை புறக்கணிப்பதன் மூலம் அரசமைப்பின் பிரிவு 41A(1)(e)க்கு முரணாகச் செயல்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்றத்தின் பிரதிநிதித்துவ செயல்பாட்டைத் தடுப்பதன் மூலம் நாடாளுமன்ற (அதிகாரங்கள் மற்றும் சலுகைகள்) சட்டத்தின் பிரிவு 29 ஐ மீறியதாகவும் பொது நலனுக்காகச் செயல்படத் தவறியதன் மூலம், நலன் மோதல்களை உருவாக்கும் செயல்களில் ஈடுபட்டதன் மூலம், பாரபட்சமற்ற தன்மையை சமரசம் செய்யும் தூண்டுதல்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தை விதிகளின் பிரிவு 7, 9 மற்றும் 25 ஐ மீறியதாகவும், பல மற்றும் கடுமையான மீறல்களைக் கொண்டதாகவும் அமைந்துளது என சாமர சம்பத் கூறினார்.

தமக்கு எதிரான லஞ்சக் குற்றச்சாட்டுகளை மறைத்து, விசாரணையின் கீழ் இருக்கும்போது அரசாங்கத்துடன் வாக்களிப்பதன் மூலம், சிறிதரன் தனது அரசமைப்புப் பொறுப்பை தனிப்பட்ட பாதுகாப்பாக மாற்றியுள்ளார், பொறுப்புக்கூறல் நிறுவனத்தை தனது சொந்த தவறான நடத்தைக்கான கேடயமாக மாற்றியுள்ளார் என்றும் அவர் கூறினார்.

தன்னை பரிந்துரைத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துக்கு மாறாக வாக்களித்த சிறிதரன், அரசமைப்பை வேண்டுமென்றே மீறியுள்ளார் எனவும், சிறுபான்மை எதிர்க்கட்சி பிரதி நிதித்துவத்தை காட்டிக் கொடுத்துள்ளார் எனவும், அரசமைப்புக் கவுன்ஸிலின் நெறிமுறை அடித்தளத்தை நாசமாக்கியுள்ளார் எனவும் சாமர சம்பத் கூறினார்.

"தமக்கு எதிரான கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து அவர் மௌனம் காப்பது, நாடாளுமன்றம் கடைப்பிடிக்க வேண்டிய வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மை ஆகிய கொள்கைகளை மீறுகிறது.

"இந்த நடத்தை முறை வெறும் அரசியல் தவறான நடத்தை மட்டுமல்ல, இது தார்மீக ஊழல். இது பொதுமக்களின் நம்பிக்கையை சிதைக்கிறது, நாடாளுமன்றத்தின் கண்ணியத்தை மீறுகிறது, மேலும் நாட்டின் ஜனநாயக நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கையை காட்டிக் கொடுக்கிறது," என்றுன் சாமர சம்பத் கூறினார்.

இந்த விவகாரம் சிறப்புரிமைகள் குழுவிற்கு பரிந்துரைக்கப்படும் என்று சபாநாயகர் கூறினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*"இதே சமயம் அரசமைப்பு கவுன்ஸிலுக்கு ஆளும் தரப்பு மற்றும் பிரதான எதிர்க்கட்சி ஆகியவற்றைச் சாராத 24 எம்.பிக்களின் சார்பாகவே சிறிதரன் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்பது தெரிந்ததே.*

*"இந்த 24 எம்.பிக்களில் தமிழரசுக் கட்சியின் எட்டு எம்.பிக்கள் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகிய பத்து தமிழ் எம்.பிக்களைத் தவிர்ந்த மற்றைய 14 பேரும் தங்கள் சார்பில் அரசமைப்புக் கவுன்ஸிலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிதரன், அங்கு பெரும்பாலும் ஆளும் தரப்பின் நிலைப்பாட்டையே ஆதரித்துச் செயற்படுகின்றார் என்ற அடிப்படையில் தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்தும் வழிவகை பற்றி ஆராய்ந்து வருகிறார்கள் என்று அறிய வந்தது."*

- என்று அன்றைய பத்தியை முடித்திருந்தேன்.

ஆக, எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஆராய்ந்து, இந்த வழிவகையை - நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குற்றச்சாட்டை முன்வைக்கும் முடிவை - எடுத்துச் செயல்படுத்தி இருக்கிறார்கள் என்பது கடந்த பத்து நாள்களின் பெறுபேறாக வெளிவந்திருக்கிறது.

அரசமைப்புக் கவுன்ஸிலைப் பொறுத்தவரை இரண்டு முக்கிய முடிவுகளில் சிறிதரனின் பங்களிப்பு - அரசுத் தரப்புக்கு இயைவாகச் செயற்பட்டார் என்ற ரீதியில் - சர்ச்சைக்குரியதாகி இருக்கின்றது.

ஒன்று - லஞ்ச, ஊழல் முறைகேடுகள் குறித்து விசாரிக்கும் ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகமாக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திஸநாயக்கவின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட விடயம். அரசுத் தரப்புடன் சேர்ந்து சிறிதரன் அளித்த ஒரு மேலதிக வாக்கின் மூலம் அவரது பெயர் அரசமைப்புக் கவுன்ஸிலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பதவிக்கு பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மாதவ தென்னகோன் போட்டியிட்டு இருந்தார்.

அரசமைப்பு கவுன்ஸில் நடத்திய நேர்முகத்தேர்வில் புள்ளியடிப்படையில் அவரே முதலாவதாகவும் வந்திருந்தார்.

இதற்கு முன்னர் இந்தப் பதவியில் இருந்தவர் ஒரு நீதிபதி. நீதிச் சேவை ஆணைக்குழுவின் கீழ் பணியாற்றும் அவர், அதிலிருந்து மேற்படி லஞ்ச, ஊழல் முறைகேடுகள் தொடர்பான ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகமாக விடுப்பு பெற்று பணியாற்ற வந்திருந்தார். நீதி சேவை ஆணைக் குழுவில் இருந்து வந்த ஒருவர் எவ்வாறு நிறைவேற்றதிகாரத்தின் கீழ் இத்தகைய பணியில் இணைந்து கொண்ட பின்னர், மீண்டும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் கீழ் சுயாதீனமாக பணியாற்றத் திரும்ப முடியும் என்று கேள்வி எழுப்பப்பட்ட பின்னணியில்தான் அவர் அப்பதவியை விட்டு விலகிச் சென்றார்

அதன் பின்னர் நடந்த தேர்விலும் அதிக புள்ளிகள் பெற்ற - தகுதிகள் கூடிய - பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஒருவரை நிராகரித்துவிட்டு, மீண்டும் ஒரு நீதிபதியை அவரது நீதித்துறை சேவையில் இருந்து தற்காலிகமாக விடுவித்து இந்த விசாரணை ஆணையாளர் நாயகமாக எவ்வாறு நியமிக்க முடியும், அவர் இந்த வழக்குத் தொடுநர் போன்ற பதவி நிலைக்கு வந்து விட்டு, பழைய நீதிச் சேவைக்கு - நீதிபதி பதவிக்கு - எப்படித் திரும்ப முடியும் என்று பலராலும் மோசமாக விமர்சிக்கப்படுகின்றது.

இந்தப் பதவிக்கு குறைந்த பட்சம் 15 ஆண்டுகள் வழக்குத் தொடுநராக இருந்த அனுபவம் இருக்க வேண்டும் என்று அடிப்படை விதி ஒன்று கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்தத் தகுதி சட்ட மா அதிபர் திணைக்களத்தில் 27 ஆண்டுகள் கடமையாற்றும் மாதவ தென்னக்கோனுக்கு இருந்ததே தவிர, நேரடியாக நீதிபதியாக இருந்த ரங்க திஸநாயக்காவுக்கு இருக்கவில்லை.

அப்படி இருக்கையில், ரங்க திஸநாயக்காவை அரசாங்கம் இப்பதவிக்கு நியமிக்கத் தீர்மானித்த போது, அதை அரசமைப்பு கவுன்ஸிலில் சிறிதரன் ஆதரித்தார் என்றும், அந்த ஒரு வாக்கின் மூலம் இந்த நியமனத்தை அரசு செய்து கொண்டது என்றும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

இது தொடர்பாக இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்திலும் சிறிதரன் எம்.பிக்கு எதிராக காட்டமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டமை பற்றி என் பத்தியில் முன்னர் குறிப்பிட்டு இருக்கிறேன்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஓரளவு நேர்மையோடு செயல்பட்டவர் மாதவ தென்னக்கோன் என்பதையும், பிள்ளையானை பிணையில் விடும் நடவடிக்கையை முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்திலேயே சட்டமா அதிபரையும் மீறி கடுமையாக எதிர்த்தவர் அவர் என்பதையும் அப்போதே நான் கோடி காட்டியிருந்தேன். தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் அவை குறித்து பேசப்பட்டது.

அத்தகைய மாதவ தென்னக்கோனை இப்பதவிக்கு பரிந்துரைக்க முடியாமல் போனமைக்கு சிறிதரன் மீது எதிர்க்கட்சியினரிடையே கடுமையான குற்றச்சாட்டுகள் பேசப்பட்டன.

அடுத்தது - பத்து நாளகளுக்கு முன்னர் நான் விரிவாக குறிப்பிட்ட - இழப்பீடுகள் தொடர்பான அலுவலகத்துக்கு உறுப்பினர்களாக படைத்தரப்பு பின்னணி கொண்டவர்கள் நியமனமான விடயம்.

ஐந்து உறுப்பினர்கள் கொண்ட அந்த அலுவலகர்கள் பதவிக்கு ஏற்கனவே ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவர் பதவியில் இருக்கிறார். மற்ற நால்வரைத் தெரிவு செய்யும் அரசமைப்புக் கவுன்ஸிலின் நேர்முகத் தேர்வுக் குழுவில் ஒருவராகவும், பின்னர் ஜனாதிபதிக்கு பெயர்களை பரிந்துரைக்கும் அரசமைப்பு கவுன்ஸிலின் உறுப்பினர்களில் ஒருவராகவும் சிறிதரன் செயற்பட, ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்ட நான்கு பேர்களில் இரண்டு பேர் படைத்தரப்பு பின்னணியை கொண்டவர்களாக அமைந்தனர்.

படைத்தரப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட - பெரும்பாலும் தமிழ் மக்களுக்கு - இழப்பீடு வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கும் ஐவர் குழுவில் மூவர் படைத் தரப்பினராக அமைகின்ற வாய்ப்பை அரசமைப்பு கவுன்ஸிலில் உறுப்பினராக இருந்து கொண்டு சிறிதரனும் சேர்ந்து ஒத்துழைத்து வழி செய்தார் என்பது எதிர்க்கட்சி தரப்பிலும் தமிழர் தரப்பிலும் பலத்த ஆட்சேபங்களை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஆளும் கட்சி மற்றும் பிரதான எதிர்க்கட்சி ஆகியவற்றைத் தவிர்ந்த ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் சார்பான ஒரு பிரதிநிதிக்கு அரசமைப்பு கவுன்ஸிலில் இடம் உண்டு. இப்போதைய நாடாளுமன்றத்தில் அவ்வாறு இருக்கும் 24 எம்.பிக்களின் சார்பிலேயே அரசமைப்பு கவுன்ஸிலை சிறிதரன் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அது தொடர்பான தேர்தலில் ஜீவன் தொண்டமானோடு போட்டியிட்ட சிறிதரன் 11க்கு 10 என்ற வாக்குகள் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இப்போது எதிர்க்கட்சிகள் தரப்பில் சிறிதரனுக்கு எதிரான கருத்து நிலைப்பாடு சூடு பிடித்து வருகிறது.

சாமர சம்பத் எம்.பி. இவ்விடயம் தொடர்பாக நேற்றுத் தான் சமர்ப்பித்த உரிமை மீறல் பிரச்சினை தொடர்பான குற்றச்சாட்டில் இந்த அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து சிறிதரனை மாற்றி அந்த இடத்துக்கு மீண்டும் தேர்தலில் நடத்தி, ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்று கோரிக்கையை முன் வைத்திருக்கிறார். அதற்கு சாத்தியம் உண்டா, அப்படி நடக்கும் நடக்குமா என்பது எனக்கு தெரியவில்லை.

தொடர்ந்தும் அரசமைப்பு கவுன்ஸிலில் ஆளுந்தரப்பு கண் அசைக்கும் முடிவுகளுக்கு இணங்கி சிறிதரன் கையுயர்த்தினார் என்ற ஒரு தோற்றப்பாடு வெளிப்படுமானால் அது சிறிதரனுக்கு மேலும் பலத்த அரசியல் நெருக்கடிகளைத் தரும் என்றே தெரிகின்றது.

சிறிதரனின் அரசமைப்புக் கவுன்ஸில் செயற்பாடு குறித்து மற்றைய எதிர்க்கட்சிகள் வெளிப்படை யாகச் சீறத் தொடங்கிவிட்டன. அவரது கட்சி மாத்திரம் அம்சடக்காக ஒன்றும் நடக்காதது போல இருக்கின்றது. கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், செயலாளர் சுமந்திரனும் இவ்விடயத்தில் சத்தம் சந்தடி காட்டாமல் நிசப்தம் பேணுகின்றார்கள்.

அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அப்பதவியில் தாம் ஆற்றும் கடமைகள், செயற்பாடுகள் தொடர்பில் யாருக்கும் விளக்கம், வியாக்கியானம் கொடுக்க வேண்டிய சட்ட ரீதியான கடப்பாடு அதன் உறுப்பினருக்கு இருக்கின்றது என யாரும் கூற முடியாது. யாரும் அவரிடம் விளக்கம் கூட கேட்க முடியாது.

ஆயினும், இந்த விடயங்களில் உண்மையில் தவறிழைக்கப்பட்டிருக்கின்றதா, இல்லை, உண்மையில் என்ன நடந்தது என்பவை பற்றி சிறிதரன் மட்டுமல்லாமல் அவரது கட்சியினரும் சட்ட ரீதியாக இல்லாவிட்டாலும் - தார்மீக அடிப்படையில் - தமிழ் மக்களுக்கு விளக்கம் கொடுக்க பொறுப்பும் கடமைப்பாடும் கொண்டுள்ளார்கள் என்பதை சுட்டிக் காட்டுவது நமது கடமையாகிறது.

# வடக்கில் இராணுவத்தாலேயே போதைப்பொருள் விநியோகம்

## சபையில் கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

மக்கள் மீது உண்மையான பற்றுக் கொண்ட அரசாங்கம் ஒன்றினால் மாத்திரமே போதைப்பொருளை முற்று முழுதாக ஒழிக்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது இதனை தெரிவித்த அவர், வட மாகாணத்தில் போதைப்பொருளை பரப்புவதில் இராணுவத்தினருக்கு பெரும் பங்கு உள்ளதாகவும் குறிப்பிட்டார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டு பகுதிகளில் போதைப்பொருள் பூச்சிய பாவனையில் இருந்தது. அவர்கள் மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் இயங்கியதால் இது சாத்தியமானது.

இந்த காலப்பகுதியில் வடக்கில் அரச கட்டுப்பாட்டு பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இருந்தமையினால் அங்கு போதை அச்சுறுத்தல் குறைந்த அளவிலேயே இருந்தது.

எவ்வாறாயினும், போர் மௌனிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்கு பின்னரே வடக்கில் பாரியளவில் போதைப்பொருள் பரவல் தொடங்கியுள்ளது.

இராணுவத்தினரே இந்த நடவடிக்கையில் முழுவீச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர். இன்று சில பகுதிகளில் சமூக விரோதிகளுக்கு அடைக்கலம் தரும் இடமாக இராணுவ முகாம் மாறியுள்ளது.



விடுதலைப்புலிகளின் புரட்சியை தோற்கடிப்பதற்கு இராணுவத்தின் ஊடாக பயன்படுத்தப்பட்ட போதைப்பொருள் என்ற புற்றுநோய் இன்று தெற்கு வரை பரவியுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான முறைப்பாடுகளையும் பொலிஸ் நிலையங்கள் ஏற்க மறுக்கின்றன.

எனவே, போதைப்பொருள் பரவலில் இராணுவத்துக்கு உள்ள தொடர்பு குறித்த தேடிப்பார்க்க வேண்டும்.

பொலிஸ், கல்வி, சுகாதார போன்ற சமூகத்துக்கு மிகவும் தேவைப்படும் விடயத்தை அந்தந்த மக்களிடமே விடவேண்டும். அப்போதுதான் தங்களது மக்களுக்கு தாம் பொறுப்பானவர்கள் என்ற உணர்வு ஏற்படும்.

மாறாக, வடக்கு கிழக்குடன் எவ்வித தொடர்பல்லாத தரப்பினரால் அங்குள்ள பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்க முடியாது. கடந்த காலங்களில் இத்தகைய தரப்பினரின் செயற்பாட்டாலேயே வட மாகாணம் திட்டமிட்ட வகையில் கல்வி உள்ளிட்ட விடயங்களில் பின்தள்ளப்பட்டது.

எனவே, அரசாங்கம் எடுக்கும் போதைப்பொருள் ஒழிப்புக்கு தேசிய வேலைத்திட்டத்துக்கு தங்களால் பூரண ஆதரவு வழங்கப்படும்.

எனினும், ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுப்பதாயின் இந்த செயற்பாட்டிலிருந்து இராணுவத்தை முற்று முழுதாக நீக்க வேண்டும்.

நிபுணத்துவம் பெற்றவர்களை மாத்திரம் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தினால் மாத்திரமே போதைப்பொருள் ஒழிப்பு என்பது சாத்தியப்படும்.

அதேநேரம், போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு மாறாக போதைப் பொருளை விற்பவர்களே தண்டிக்கப்பட வேண்டும்." – என்றார்.

---

### யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட 14 பேர் நேற்று போதைப்பொருள் களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் பொலிஸாரினால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் 38 வயதுக்கு உட்பட்டவர்களாகக் காணப்படும் அதேநேரம் ஒருவர் 16 வயது சிறுவனாகவும் உள்ளார் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேபோல் யாழ். குடாநாட்டில் 3 தினங்களுக்கு முன்பும் 11 பேர் போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த முடியும்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

குருநாகல் பிரதேசத்தில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மாகாண சபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும், அதற்கு எம்மால் எந்த வகையிலும் பொறுப்புக் கூற முடியாது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தற்போது நாட்டில் சட்டம் ஒன்று இல்லை. இந்தப் பொறுப்பு நாடாளுமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் இருந்து தற்போது கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ முறைமைக்கு மாறியிருக்கின்றோம். விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையில் காணப்பட்ட குறைபாடுகளாலேயே இந்த மாற்றம் ஏற்பட்டது. அதற்கமைய புதிய முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இந்த முறைமையே அறிமுகப்படுத்தப்பட்டது. எனவே தற்போது இறுதித் தீர்மானத்தை எடுக்கக் கூடிய பொறுப்பு நாடாளுமன்றத்திடமே காணப்படுகின்றது. இந்த இரு முறைமைகளில் பொறுத்தமானதை நாடாளுமன்றமே தெரிவு செய்ய வேண்டும்.

அவ்வாறு தேர்தல் முறைமை தேர்வு செய்யப்படும் பட்சத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் எம்மால் தேர்தலை நடத்த முடியும். அதில் எவ்வித சிக்கலும் இல்லை.

அதேவேளை, இத்தனை ஆண்டுகள் மாகாண சபைத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டமைக்குச் சகலரும் பொறுப்புக் கூற வேண்டும்.

எனவே, அனைவரும் இந்தப் பொறுப்பை ஏற்று ஒற்றுமையுடன் அதனை நிறைவேற்ற வேண்டும். அதனை விடுத்து ஒரு புறமாகவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் பக்கம் இந்தப் பந்தைத் தள்ளிவிடுவது பொருத்தமற்றது." – என்றார்.

### செவ்வந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆனந்தன் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆனந்தன், மீன்பிடிப்பதற்காகக் கடற்றொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட படகே நேற்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

7598 என்ற இலக்கத்துடன் காணப்படும் படகு தற்போது யாழ். பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதில் தொடர்கின்றது தாமதம்

## இன்னமும் புதிய சட்டம் இறுதி செய்யப்படவில்லை

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நவம்பர் முதல் வாரத்தில் இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த செப்டெம்பர் மாதமளவில் முழுமையாக நீக்கப்படும் என்று முன்னதாக நீதி அமைச்சர் தெரிவித்திருந்த நிலையிலேயே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். அதைத் தக்கவைக்கும் எண்ணம் இல்லை. ஆனால், சட்டம் ஒன்றை இரத்துச் செய்யும்போது அதை விஞ்ஞானபூர்வமாக மேற்கொள்ள வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய சட்ட வரைவைத் தயாரிக்கும் குழு எதிர்வரும் 28ஆம் திகதி கூடவுள்ளது. அன்று சட்ட வரைவு இறுதிப்படுத்தப்பட்டுக் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன். அதன்பின்னர் பொதுமக்கள் கருத்துக்களைப் பெறுவதற்காக சமூகத்தில் ஒரு மாதத்துக்கு அந்தச் சட்ட வரைவு விடப்படும்.

எதிர்வரும் 28ஆம் திகதி குழு அறிக்கையை வழங்கினால் சட்ட வரைவு



தயார் என்ற அறிப்பை எம்மால் எதிர்வரும் நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் வெளியிடமுடியும். நாட்டின் பாதுகாப்புக் கருதி புதிய சட்டம் வரும் வரையில் இருக்கும் சட்டத்தைப் பயன்படுத்த நேரிடும்." – என்றார்.






# கிழக்கு பல்கலையில் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில், தமிழ்நாடு சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தின் பிரதான அனுசரணையுடன் கிழக்கு பல்கலைக்கழகம் சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டை நேற்று முழு நாள் நிகழ்வாக நடாத்தியது.

7 ஆவது முறையாக திருகோணமலை வளாகத்தில் இந்த ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தணசேகர கலந்துகொண்டு மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை. சமூக நீதி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகிவற்றுக்கிடையிலான நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டு காட்டுவதாக இவ் ஆராய்ச்சி மாநாட்டின் கருப்பொருள் அமைந்துள்ளது.

மேற்படி கருப்பொருளை அடிப்படையாக கொண்டு 7 வெவ்வேறு தலைப்புகளில் 73 ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களால் மாநாட்டில் சமர்பிக்கப்பட்டன.இந்திய மற்றும் இலங்கை பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் பலர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அங்குண்டு; இங்கில்லை!

இலங்கையில் பாதாள உலக கோஷ்டிகள் மற்றும் போதைப் பொருள் விற்பனைக் குழுக்களின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக நடத்தப்பட்ட சோதனைகளில் இந்த ஆண்டில் மாத்திரம் 1,947 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்திருக்கிறார்.

முன்னர் ஒரு இராணுவ முகாமில் இருந்து ரி 56 ரகத்தில் 78 துப்பாக்கிகள் பாதாள உலகக் கும்பல்களுக்கு வழங்கப்பட்டன என்றும், அவற்றில் 36 துப்பாக்கிகள் ஏற்கனவே அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு விட்டன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டி உள்ளார்.

சில பாதாள உலகக் கும்பல்கள் இன்னும் ஆயுதங்களை வைத்திருக்கின்றன எனவும், அதனால் நாடு முழுவதும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இந்த விடயத்தில் ஒரு விவகாரத்தை அவர் வேண்டுமென்றே மறைக்கின்றார் என்று படுகின்றது. தெற்கில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மற்றும் வன்முறைகளுடன் ஒப்பிடுகையில் வடக்கு - கிழக்கில் இத்தகைய மோசமான நிலைமை இல்லை என்பதுதான் உண்மை. அதைக் குறிப்பிடாமல் நாடு முழுவதிலும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றன என அவர் கூறுவது முற்றிலும் தவறு.

உண்மையில் ஒரு மிகப்பெரிய போராட்டம் மூன்று தசாப்தங்கள் தொடர்ந்து நடந்த ஒரு பிரதேசத்தில் - பல்லாயிரம் இயந்திரத் துப்பாக்கிகளும் கனரக ஆயுதங்களும் கனன்று கொண்டிருந்த ஒரு பகுதியில் - அவற்றை இயக்கும் பரிச்சயம் கொண்ட பல்லாயிரம் முன்னாள் போராளிகள் தங்கள் ஜீவனோபாயத்துக்கே வழியின்றி சமூகத்துக்குள் விடப்பட்டுள்ள சூழலில் - அவர்கள் பயன்படுத்திய பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களும் வெடிப் பொருள்களும் முழு அளவில் மீட்கப்படாமல் இன்னமும் மறைவிடங்களில் தேங்கி கிடக்கையில் - இத்தகைய பாதாள உலகம் குழுக்கள் உருவாகவும், செயல்படவும் சாதகமான சூழ்நிலை வடக்குக் கிழக்கில்தான் பெருமளவில் உள்ளது.

ஆனால் அத்தகைய மோசமான செயல்களில் வடக்குக் கிழக்கு இளைஞர்களோ, முன்னாள் போராளிகளோ ஈடுபடவில்லை. அவர்கள் தங்கள் இனம் காக்க கொள்கை அடிப்படையில், கோட்பாட்டு ரீதியில், ஆயுதம் தூக்கிய மேன் மக்கள். அதன் காரணமாக அந்தத் தேவை கருதி அல்லாமல், அவர்கள் வேறு சீரழிந்த - கீழ்த்தரமான - விடயங்களுக்கு ஆயுதம் தூக்கப் போவதில்லை என்ற ஒரே காரணம் கருதியே வடக்குக் கிழக்கில் எத்தகைய பாதாள குழுக்களும் உருவாகவில்லை.

ஆனால் நீதி, நியாயம் அற்ற முறையில் தமிழர் போராட்டத்தை அழித்தொழிக்க வேண்டும் என்ற வஞ்சக எண்ணத்தோடு மட்டுமே பயிற்றப்பட்ட - கனரக ஆயுதங்களைக் கையாளும் பரிச்சயமிக்க - பல்லாயிரம் முன்னாள் படையினர் தெற்கில் குவிந்து கிடக்கிறார்கள். தமிழ்ப் போராளிகளுக்கு எதிராகப் போராட என்ற பெயரில் நாட்டுக்குள் தருவிக்கப்பட்ட பெருமளவு ஆயுதங்களும் தாராளமாகக் குவிந்து கிடக்கின்றன. அதனால் அங்கு பாதாள உலகக் கோஷ்டிகளும் போதைப் பொருள் வர்த்தகக் கும்பல்களும் கொடிகட்டி பறக்கின்றன.

இந்த வேறுபாட்டை பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவும், அவரது அரசுத் தரப்பினரும், தென்னிலங்கையும் புரிந்து கொள்வது நல்லது.

# என்னைக் கொலை செய்தால் ஆவியாக வந்து பழிதீர்ப்பேன்

## நாடாளுமன்றத்தில் சாமர எம்.பி. எச்சரிக்கை

"என்னைக் கொலை செய்தால் ஆவியாக வந்தேனும் பழிவாங்குவேன் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சரே."

– இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே சாமர சம்பத் தஸநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

தனது உரையின்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தொடர்பில் சாமர எம்.பி. கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

"அமைச்சரே, எம்மை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முடியாது. முடிந்தால் எம்மைக் கொல்லுங்கள். ஆவியாக வந்தேனும் பழிதீர்ப்பேன். எனது பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது. என்னைக் கொல்வதற்குதான் பார்க்கின்றீர்கள். கொலை செய்தாலும் உங்களுக்குப் பின்னால்தான் நிற்பேன்." – என்றும் சாமர சம்பத் தஸநாயக்க எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.



# முகத்தைப் பார்த்தாலே பயம்! ஆவியாக வந்து விடாதீர்கள்!!

## சாமர எம்.பிக்கு நீதி அமைச்சர் பதிலடி



"உங்களின் முகத்தைப் பார்த்தாலே பயமாகத்தான் இருக்கின்றது. காலையில் பார்த்தால்கூட அப்படிதான். எனவே, தயவு செய்து ஆவியாக வந்துவிட வேண்டாம். நாம் உங்களைப் பாதுகாபபோம். அச்சப்பட வேண்டாம்."

– இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்துக்குப் பதிலடி கொடுத்தார் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய சாமர சம்பத் தஸநாயக்க எம்.பி., "என்னைக் கொலை செய்தால் ஆவியாக வந்தேனும் பழிவாங்குவேன்." எனக் குறிப்பிட்டிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையி லேயே நீதி அமைச்சர் சிரித்தபடி மேற்கண்டவாறு கூறினார்.

# ஆறு கிலோ மெண்டி என்ற போதைப்பொருளுடன் திருகோணமலையில் சந்தேக நபரொருவர் கைது!

## பெல்ஜியத்திலிருந்து தபால் பொதியில் வந்ததாம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை பிரதான தபால் நிலையத்தில், வெளிநாட்டில் இருந்து வந்த 'மெண்டி' என்ற போதைப்பொருள் கொண்ட 02 பொதிகளை, திருகோணமலை சுங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளமையுடன் சந்தேக நபரொருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இரண்டு போதைப்பொருள் கொண்ட பொதிகளும் பெல்ஜியம் நாட்டிலிருந்து அஞ்சல் பொதி மூலம் திருகோணமலை பிரதான தபால் நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

டுபாயில் உள்ள மூதூர், ஜாயா நகரைச் சேர்ந்த நௌசாத் என்பவர் இந்த இரண்டு பொதிகளையும் தபால் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு தற்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார் என அறிய முடிகின்றது.



தபால் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இந்தப் பொதிகளை பொன்னுத்துரை பனவன் (26வயது) என்பவர் பெற்றுக்கொள்ள தபால் அலுவலகத்துக்கு வருகை தந்த போதே துறைமுக பொலிஸ் நிலைய பொலிஸாரினால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரைத் தாம் விசாரணை செய்து வருகின்றனர் எனத் துறைமுகப் பொலிஸார் தகவல் தெரிவித்தனர்.



# செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் சர்வதேச தொழில்நுட்ப உதவி பெறப்படும்

## உண்மையைக் கண்டறிவதற்கு இது முக்கியம் என்கிறார் நீதி அமைச்சர்

“யாழ்ப்பாணம் – செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேச தொழில்நுட்ப ஒத்துழைப்பு பெறப்படும். ஏனெனில் உண்மையைக் கண்டறிவதற்கு இது முக்கியம்.”

– இவ்வாறு நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெறப்பட வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எமக்கு சில விடயங்களில் ஆய்வு கூட வசதி இல்லை. எமது நாட்டு பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

எமக்கு உண்மையை கண்டறிவது தான் முக்கியம். தொழில்நுட்ப உதவியும் தேவைப்படுகின்றது. எனவே, சர்வதேச தொழில்நுட்ப உதவி பெறப்படும்.” – என்றார்.

# 12 ஆயிரத்தும் மேற்பட்டோர் சீரற்ற காலநிலையால் பாதிப்பு

இலங்கையில் நிலவும் கனமழை, பலத்த காற்றுடனான சீரற்ற காலநிலை காரணமாக 12 ஆயிரத்தும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத் தின் கணக்கெடுப்பின்படி பலத்த மழை, காற்று முதலான இயற்கை அனர்த்தங்களினால் 14 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 3 ஆயிரத்து 36 குடும்பங்க ளைச் சேர்ந்த 12 ஆயிரத்து 142 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 4 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 480 வீடுகள் சேதமாகியுள்ளன என்றும் தெரி விக்கப்படுகின்றது.

இயற்கைப் பேரிடர்கள் நிலவி வரும் இந்த நாட்களில் அவசர தேவைக்காகத் தொடர்பு கொள்வதற்கு 117 என்ற இலக்கத் துக்கு அழைக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் பொதுமக் களிடம் கேட்டுக்கொள்கின்றது.



# மரக்கறி வியாபாரிகளுக்கு ஆதரவாக பருத்தித்துறையில் இன்று போராட்டம்

## முச்சக்கர வண்டி சேவை சங்கமும் ஆதரவு

பருத்தித்துறை மரக்கறி சந்தை வியாபாரிகளுக்கு ஆதரவாக மரக்கறி சந்தையை நவீன சந்தை கட்டடத் தொகுதிக்கு இடமாற்றுமாறு வலியுறுத்தி பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினரால் இன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட உள்ள கவனவீர்ப்பு போராட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த கவனவீர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவாக பருத்தித்துறை வர்த்தகர்கள் இன்று காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை கடைகளை மூடி ஆதரவு தெரிவிப்பதுடன் கவனவீர்ப்பு போராட்டத்திலும் பங்கேற்க உள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை நகர் முச்சக்கர வண்டி சேவை சங்கத்தினரும், மரக்கறி வியாபாரிகளும் இக்கவனவீர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரத்த வாந்தி எடுத்து குடும்பஸ்தர் மரணம்



வாயாலும் மூக்காலும் இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பாண்டித்தாழ்வு, காரைநகரைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கோணலிங்கம் சுந்தரலிங்கம் (வயது 47) என்பவராவார்.

நேற்று வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் வலந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் 9.00 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், முற்பகல் 10.00 மணியளவில் அவர் உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை ஊர்காவற்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# தீவிரமாக பரவி வரும் காய்ச்சல்; சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

இலங்கையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இன்ப்ளூவென்சா "ஏ" மற்றும் "பி" தொற்றுகள் அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, மழைக் காலங்களிலும், ஆண்டு இறுதியிலும் பருவகாலத் தொற்று நோய் மிகவும் தீவிரமாக இருக்கும் என்றும் குழந்தைகள் நல மருத்துவ ஆலோசகர் வைத்தியர் மகேஷக விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இதனால், பகல் நேர பராமரிப்பு மையங்கள், பாலர் பாடசாலைகள் மற்றும் சிறுவர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல சிறுவர்களுக்கு திடீர் காய்ச்சல், இருமல், தொண்டை வலி, மூக்கு ஒழுகுதல் மற்றும் சோர்வு ஏற்படுவதால் இந்த நோய் பல வடிவங்களில் தோன்றும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சிலருக்கு சளி போன்ற அறிகுறிகள், காது தொற்று, மூச்சுத் திணறல்களும் ஏற்படலாம் என்றும் வைத்தியர் மகேஷக விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு, நீரிழப்பு ஏற்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அரிதான சந்தர்ப்பங்களில், இன்ப்ளூயன்ஸா நரம்பு மண்டலத்தைப் பாதிக்கலாம் என்றும் வைத்தியர் மகேஷக விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் இரண்டு வயதுக் குட்பட்ட குழந்தைகள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ள குழந்தைகள் நிமோனியா மற்றும் கடுமையான சுவாச சிக்கல்களுக்கு அதிக ஆபத்தை எதிர்கொள்கின்றனர் என்று வைத்தியர் விஜயவர்தன கூறினார்.

எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அறிகுறிகளுக்காக உன்னிப்பாகக் கண்காணிப்பதுடன், கடினமான சுவாசம், தொடர்ச்சியான வாந்தி, பசியின்மை அல்லது அசாதாரண மயக்கம் உள்ளிட்ட கடுமையான நோயின் அறிகுறிகள் தோன்றினால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறும் வைத்தியர் மகேஷக விஜயவர்தன வலியுறுத்தியுள்ளார்.



# நாடாளுமன்றில் அடுத்த மாதம் விசேட பாதுகாப்புச் சோதனை

## சபாநாயகர் அறிவிப்பு

நவம்பர் மாதத்தில் மூன்று நாள்களுக்கு நாடாளுமன்றத்தில் விசேட பாதுகாப்பு சோதனை நடாத்தப்படும் என சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அதன்படி, நவம்பர் 4, 6 மற்றும் 7 ஆகிய மூன்று நாள்களில் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வறைகள் மற்றும் ஆடை அலுமாரிகள் உட்பட முழு நாடாளுமன்றக் கட்டடமும் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படும் என சபாநாயகர் அறிவித்தார்.

இதற்கிடையில், நவம்பர் 7 வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற கட்டடத்தின் உயர் பாதுகாப்பு பகுதிகளும் பாதுகாப்பு சோதனைக்கு உட்படுத்தப்படும்.

அன்று பொது மக்கள் பார்வையிடும் பகுதி விருந்தினர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படும் என்றும் சபாநாயகர் அறிவித்துள்ளார்.



## கைது செய்யப்பட்ட பாதாளக் குழுவின் முக்கியஸ்தர்

# பெக்கோ சமனின் கைபேசியில் ‘நாமல் சேர்’ என்று பதிவு உண்டு!

### விரைவில் உண்மை வெளிவரும் என பிரதி அமைச்சர் ஜயசிங்க தெரிவிப்பு

“நாமல் சேர், மகே சேர் ராஜபக்ஷ’ என்று கைது செய்யப்பட்டுள்ள பாதாளக் குழுவின் முக்கியஸ்தர் பெக்கோ சமனின் கைத்தொலைபேசியில் உள்ளது. அந்த நாமல் சபையில் இருக்கும் இந்த நாமலா அல்லது வேறு நாமலா என்பது எமக்குத் தெரியாது. ஆனால், விரைவில் உண்மை வெளிவரும் என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்ற போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒழிப்பதற்கான ஒரு தேசிய வேலைத் திட்டம் மற்றும் சட்ட ரீதியான கட்டமைப்பை வலுப்படுத்துதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரை யாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

“போதைப்பொருள் உற்பத்தி மாவட் டமாக அம்பாந்தோட்டையை எதிர்த்தரப் பினர் மாற்றியமைத்துள்ளார்கள். போதைப்பொருள் மற்றும் பாதாள குழுக் களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கை களை இடைநிறுத்தப் போவதில்லை. இலகுப்படுத்தப் போவதுமில்லை.

ஐ.ஆர்.சி. ஆவணப்படுத்தலில் 1305/ 2015 கீழ் ‘பி’ தரத்தில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிக்காகவே எதிர்க்கட்சியினர் இன்று முன்னிலையாகுகின்றார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியில் 35 பிரதேச சபைத் தலைவர்கள் உள்ளனர். வெலி கமவில் கொலை செய்யப்பட்டவரைத் தவிர்த்து மிகுதி 34 பேருக்கு எவ்வித அச்சுறுத்தலும்,பாதிப்பும் ஏற்படவில்லை.

மாகந்துரே மதூஸ் வெளிப்படுத்திய உண்மைகள் அவருடன் புதைக்கப்பட்டன. மைத்திரி, ரணில், சஜித் ஆகியோர் அன்று அரசியல் குற்றவாளிகளைப் பாதுகாத்தார்கள். அதேபோல் கோட்டாபய மற்றும் ரணில் – ராஜபக்ஷக்கள் குற்ற வாளிகளைப் பாதுகாத்தார்கள்.

நாமல் ராஜபக்ஷவின் சகாவான தங்காலை பிரதேச சபைத் தலைவர் வெளிநாட்டவர் ஒருவரைக் கொலை செய்தார். நாட்டுக்குச் சுற்றுலா வந்த பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோ கம் செய்ய முயற்சிக்கையில் அதை அந்தப் பெண்ணின் கணவர் தடுத்துள் ளார். அதனால் அந்த வெளிநாட்டவர் கொலை செய்யப்பட்டார். சம்பத் மனம் பேரி, பெக்கோ சமன் ஆகியோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள்.

பதிவுசெய்யப்பட்டகுற்றவாளிகளுக்குப் பொலிஸ் பாதுகாப்பு எந்த நாட்டில் வழங்கப்படுகின்றது?

‘நாமல் சேர், மகே சேர் ராஜபக்ஷ’ என்று பெக்கோ சமனின் கைத்தொலை பேசியில் உள்ளது. அந்த நாமல் சபையில் இருக்கும் இந்த நாமலா அல்லது பிறி தொரு நாமலா என்பது எமக்குத் தெரி யாது. ஆனால், உண்மைகள் விரைவில் வெளிவரும்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா போதைப்பொருளுடன் அகப்பட்ட போது அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஹெலியில் நீர் கொழும்புக்கு வந்து நிமல் லான்சாவைக் கட்டியணைத்து பாதுகாத்தார். ஆனால், போதைப்பொருள் வர்த்தகத்தை நாங்கள் முடிவுக்குக் கொண்டு வருவோம். அதில் எந்த மாற்றமும் கிடையாது.” – என்றார்.



# பிரதமர் ஹரிணியை சந்தித்த மகளிர் கிரிக்கெட் அணி

ஸ்ரீலங்கா மகளிர் கிரிக்கெட் அணி, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன ஆகியோரை நேற்று அலரி மாளிகையில் சந்தித்தது.

இந்த சந்திப்பின் போது, தற்போது நடைபெற்று வரும் மகளிர் கிரிக்கெட் உலகக் கிண்ண தொடர் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

தற்போது வீராங்கனைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் தேவைப்படும் வசதிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.











# சுதேச மருத்துவப் பட்டதாரிகள் 307பேருக்கு நவம்பரில் நியமனம்

## ரவிகரன் எம்.பியின் கேள்விக்கு அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ பதில்

(பா.சதீசன்)

பட்டப்படிப்பையும் உள்ளகப்பயிற்சியையும் முடித்து வேலையை எதிர்பார்த்து காத்திருக்கும் சுதேச மருத்துவப் பட்டதாரிகளின் நியமனம்தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸவிடம் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில் கடந்த 2009,2010, 2011ஆகிய கல்வியாண்டுகளில் ஆயுர்வேத, சித்த மற்றும், யுனானி ஆகிய சுதேச மருத்துவத்துறைகளில் பட்டப்படிப்பை நிறைவுசெய்த பட்டதாரிகள் 304பேரை ஆரம்ப சுதேச மருத்துவ அலுவலர் பதவிக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 03ஆம் திகதி நியமனம் செய்யவுள்ளனர் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ பதிலளித்துள்ளார்.

அதேவேளை தற்போது நாட்டிலுள்ள சுதேச வைத்தியசாலைக் கட்டமைப்பிலே அனுமதிக்கப்பட்டுள்ள மருத்துவர் ஆளணியைவிடவும் அதிகமான அளவில், சுதேச பட்டதாரிகள் காணப்படுகின்றனர் எனவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.



நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான வினா நேரத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இவ்வாறு கேள்வி எழுப்பியநிலையில் சுகாதார அமைச்சரால் மேற்கண்டவாறு பதிலளிக்கப்பட்டது.

இதன்போது ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

மேலைத்தேய மருத்துவ சேவை வழங்கல் என்றாலும் சரி, சுதேச மருத்துவ சேவை வழங்கல் என்றாலும் சரி எமது வன்னி மாவட்டத்திற்கான மருத்துவ சேவை வழங்கலை, சமச்சீராக அணுகுங்கள் என்பதே எம் கோரிக்கை.

சுதேச மருத்துவ துறையில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு காணப்படவேண்டிய 14 சமூக நல மருத்துவர்களில் ஒருவர் மட்டுமே பணியாற்றுகிறார். 13 பணி வெற்றிடங்கள் உள்ளன. மாவட்டம் முழுதும் ஒரேயொரு சமூக நல மருத்துவரைக்கொண்டு எவ்வாறு வினைத்திறனான சேவை வழங்கலை மேற்கொள்ள முடியும்? இது எத்தகைய சமச்சீரற்ற நிலை!

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான ஐந்து சித்த மருத்துவ சேவை வழங்கும் மருத்துவமனைகளிலும் உள்ள மொத்த அனுமதிக்கப்பட்ட ஆளணி 64. தற்போது இங்கு 40 பணி வெற்றிடங்கள் உள்ளன. கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு ஊழியர் அணியுடனே முல்லைத்தீவு மாவட்ட சித்த மருத்துவ அலகுகள் பணிபுரிகின்றன.

2025 இன் முதல் எட்டு மாதங்களிலும் சராசரியாக 1000 நோயாளிகளுக்கு மேல் மேற்படி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இன்னமும் அதிகமாக நோயாளிகளை உள்ளீர்த்து சேவை வழங்குவதில் உள்ள முதன்மையான மட்டுப்பாடு குறித்த மருத்துவமனைகளில் உள்ள ஆளணிப் பற்றாக்குறையே.

சுதேச மருத்துவத் துறையில் மருத்துவர் வெற்றிடங்களுடன் மருத்துவமனைச் சூழலுக்கு மிகவும் இன்றியமையாத சுகாதாரத் தொழிலாளர்கள், சுகாதார உதவியாளர்கள், சுகாதார தூய்மை பணியாளர்கள், மர்த்தனவியலாளர் உள்ளிட்ட ஊழியர் வெற்றிடங்களும் உள்ளன. வடமாகாணம் முழுவதும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான பணி வெற்றிடங்கள் சித்த மருத்துவத் துறையில் உள்ளன. மருத்துவ சேவை வழங்கலின் தரத்தை அதிகரிப்பதற்கு, மேற்படி சேவை நிலையங்களில் உள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்புதலும் இன்றியமையாதது.

இதுவரை ஆயுர்வேத, சித்த, யுனானி பட்டக்கற்கைநெறிகளைக் கற்று, உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்து பணி நியமனங்களுக்காக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் காத்திருக்கின்றனர். தற்போது பல்கலைக்கழங்களில் மேற்படி கற்கைநெறிகளை மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கற்று வருகின்றனர். இவர்களும் தங்களுக்கு அரச வேலைவாய்ப்பை தரும் என்றே நம்பி கற்கின்றார்கள்.

மேற்படியாக ஏழாயிரத்துக்கும் மேற்பட்டுள்ள இப்பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு நீங்கள் அளிக்கும் உறுதி மொழி என்ன?

படியுங்கள். ஆனசல் அரசிடம் வேலை வாய்ப்பை கோரவேண்டாம் என்பதா?

படித்து நீங்களாக தனியார் மருத்துவ சேவை நிலையங்களை நடாத்துங்கள் என்பதா?

அல்லது ஒவ்வோர் ஆண்டும் இத்தனை எண்ணிக்கையிலான அரச பணி வெற்றிட வாய்ப்பு தான் வழங்கப்படும் என்பதா? ஏனெனில், இது தொடர்பில் ஒரு தெளிவான அறிவித்தலை அரசு இதுவரை அவர்களுக்கு வழங்கவில்லை என்றே எண்ணுகிறேன் - என்றார்.

இந்நிலையில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ இதற்குப் பதிலளிக்கையில் -

கடந்த 2025.06.30ஆம் திகதிய நிலைவரப்படி இலங்கையின் சுதேச மருத்துவசேவையில், குறிப்பாக ஆயுர்வேதம், யுனானி, சித்தம் மூன்று மருத்துவத்துறைகளுக்குமாக 2,567 அனுமதிக்கப்பட்ட சுதேச மருத்துவர் ஆளணிகள் காணப்படுகின்றன. இருப்பினும் தற்போது 2,065 சுதேசமருத்துவர்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் 502 சுதேசமருத்துவர்களின் வெற்றிடங்கள் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில் இலங்கை சுதேசமருத்துவசேவையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவசேவைகள் திணைக்களத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது.

அந்த வகையில் தற்போது நாட்டில் காணப்படும் 502சுதேச மருத்துவர் வெற்றிடங்களில், 304 ஆரம்ப சுதேச மருத்துவ அலுவலர் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புச்செய்வதற்கான அமச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

குறிப்பாக இந்த 304 சுதேச மருத்துவர் பதவிவெற்றிடங்களும் 2009, 2010, 2011ஆகிய மூன்று கல்வியாண்டுகளில் பட்டப்படிப்பினை நிறைவுசெய்தவர்களைக்கொண்டே நிரப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதனடிப்படையில் எதிர்வரும்

தொடர்ச்சி▼

# சுதேச மருத்துவப் பட்டதாரிகள் 307பேருக்கு நவம்பரில் நியமனம்

## ரவிகரன் எம்.பியின் கேள்விக்கு அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ பதில்

தொடர்ச்சி▲

நவம்பர்மாதம் 03ஆம்திகதி அந்த 304 சுதேசமருத்துவ நியமனங்களையும் வழங்கவிருக்கின்றோம்.

இவ்வாறு 304பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டபின்னர் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களுக்கும் நியமனங்களை வழங்குவோம்.

மேலும் சுதேச மருத்துவத்தில், அதாவது ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவம் ஆகிய மூன்று துறைகளிலும் 2021தொடக்கம் 2025ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் 1990 பேர் பட்டப்படிப்பினை நிறைவு செய்து வேலையை எதிர்பார்த்துள்ளனர்.

இதேவேளை குறித்த 2021தொடக்கம் 2025வரையான காலப்பகுதியில் ஆயுர்வேதம், சித்த மற்றும் யுனானி ஆகிய மருத்துவ பட்டப்படிப்பிற்கென கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகம் உள்ளிட்ட அரச பல்கலைக்கழகங்களால் மொத்தம் 2,709மாணவர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் நாட்டிலுள்ள எமது சுதேச வைத்தியசாலைக்கட்டமைப்பிற்குள் தற்போதுள்ள அனுமதிக்கப்பட்ட மருத்துவர் ஆளணியை விட அதிகமான அளவில் சுதேச பட்டதாரிகள் காணப்படுகின்றனர்.

எனினும் தற்போதுள்ள சுதேசமருத்துவர் வெற்றிடங்கள் கணக்கீடுசெய்து அதற்கமையவே ஆள்சேர்புக்கள் செய்யப்படவிருக்கின்றன. பொது அட்டவணைக்கு அமையவே அந்த நியமனங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

அத்தோடு சுதேச மருத்துவத்துறையின் பணியாட்தொகுதிகளை நியமனஞ்செய்வதுதொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். குறித்த பணியாட்தொகுதிகளை நியமனஞ்செய்வதற்கும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நியமனங்களை மேற்கொள்வதற்கென விண்ணப்பங்களைக் கோருதல், உள்ளீர்த்தல் என்பதற்கு அப்பால் அவர்களுக்கு பயிற்சியளிக்கவேண்டிய தேவையுமுள்ளது. பயிற்சிக்காலம் முடிவுற்றபின்னர் முரண்படுகளின்றி அந்த நியமனங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

# இந்த ஆண்டில் இதுவரை 1947 துப்பாக்கிகள் மீட்பு

## பாதுகாப்பு அமைச்சர் தகவல்



இலங்கையில் திட்டமிட்ட குற்றக்குழு நடவடிக்கைகள் மற்றும் போதைப் பொருள் கடத்தலை ஒடுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில், இந்த ஆண்டில் இதுவரையில் 1947 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றக்குழு வலையமைப்புகளின் முக்கிய அங்கமாக ஆயுதங்கள் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், குற்றக்குழுக்களிடம் இன்னும் ஆயுதங்கள் இருப்பதால், நாடு முழுவதும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும் கூறினார்.

அத்துடன், முன்னதாக இராணுவ முகாமொன்றிலிருந்து ரீ 56 ரகத்தைச் சேர்ந்த 78 துப்பாக்கிகள் திட்டமிட்ட குற்றக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இதில், அதிகாரிகள் இதுவரை 36 துப்பாக்கிகளை கைப்பற்றியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் திட்டமிட்ட குற்றக்குழு மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தலை அரசாங்கம் வேரறுக்கும் எனவும் இந்த நோக்கத்திற்காக, முறையான திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.







# மன்னாரில் அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாக அரச அதிபர் தலைமையில் அவசர கலந்துரையாடல்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் நேற்று வியாழக்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே. திலீபன், திணைக்கள தலைவர்கள், முப்படையினர், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் வரும் வடகீழ் பருவப் பெயர்ச்சி காலத்தில் ஏற்படக் கூடிய அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாகவும் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது, அனர்த்தம் ஏற்பட்டால் எவ்வாறு தடுப்பது என்பன குறித்து ஆராயும் அவசர முன்னாயத்தக் கலந்துரையாடலாக இது இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்டம் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது இயற்கை அனர்த்தங்களின் போது பாதிப்புக்கு உள்ளாகும் ஓர் பகுதியாக காணப்படும் நிலையில் அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப் பட்டன.

மத்திக்குச் சொந்தமான நீர்ப்பாசன திணைக்களம், பிரதான குளங்களில் நீர் அதிகமாக பெருக்கெடுக்கும் போது ஏற்படுகின்ற ஆபத்துக்களை குறைப்பது சம்மந்தமாகவும், மாகாண சபைக்கு சொந்தமான நீர்ப்பாசன குளம்,ஆறுகளில் திடீரென ஏற்படுகின்ற வெள்ள நிலையை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் 165 க்கும் மேற்பட்ட குளங்கள் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்றது. அந்த குளங்களில் ஏற்படுகின்ற வெள்ள நிலையை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் குறித்த கலந்துரையாடலில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேலும் மன்னார் மாவட்டத்தில் வெள்ள நிலைமையின் போது மக்கள் இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்குவதற்கு தற்காலிக பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. அவ்வாறான பாதுகாப்பு நிலையங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதை விட மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ள நிலைமை ஏற்படுகின்ற போது அதை கடலுக்கு வெளியேற்றுகின்ற சந்தர்ப்பங்களில் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது மன்னார் நகரில் வெள்ளை நீரை கடலுக்குள் செலுத்துவது தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.












# அம்பாறையில் கைவரிசை காட்டி வந்த தங்க நகைத் திருடர்கள் நால்வர் கைது

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நீண்ட காலமாக தங்க ஆபரணங்களை திருடிய நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட பிரதேச ஊழல் தடுப்புப் பிரிவு மற்றும் அம்பாறை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு இணைந்து குறித்த நான்கு சந்தேக நபர்களையும் ரூ.25 லட்சம் மதிப்புள்ள தங்க ஆபரணங்களையும் மீட்டுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் கினியாகல, சம்மாந்துறை, மத்திய முகாம் மற்றும் அம்பாறை ஆகிய நான்கு பொலிஸ் பிரிவுகளிலும் இந்தத் திருட்டுகளை மேற்கொண்டுள்ளமையுடன் சந்தேக நபர்களிடமிருந்து ஆறு கிராம் ஹெராயினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன் திருடப்பட்ட தங்க ஆபரணங்கள் அம்பாறை நகரில் நகை விற்பனை செய்கின்ற நிலையம் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் நகை விற்பனை நிலைய உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஒரு மாதமாக அம்பாறை மாவட்டத்தில் களவாடப்பட்ட தங்க ஆபரணத் திருட்டு எண்ணிக்கை வேகமாக அதிகரித்திருந்தது.

அம்பாறை பிரதேச ஊழல் தடுப்புப் பிரிவு மற்றும் அம்பாறை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவை ஒரு இரகசியத் தகவலின் அடிப்படையில் அனைத்து சந்தேக நபர்களையும் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர்களிடமிருந்து 6 கிராம் ஹெரோயின் மற்றும் 300 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும் பொல்ஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பரிகஹகலே மற்றும் வாவின்ன பிரதேசங்களைச் சேர்ந்த 27 முதல் 31 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் போதைப் பொருள் பழக்கத்தினால் இத்தகைய அபகரிப்புகளில் ஈடுபட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் நேற்று அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, தடுத்து வைத்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுளளன.

# நாட்டின் 11 மாவட்டங்களில் மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு



நாட்டின் 11 மாவட்டங்களுக்காக முன்னதாக விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, களுத்துறை, கொழும்பு, காலி, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் மண்மேடு சரிவு மற்றும் கற்பாறைகள் உருண்டு விழும் அபாயங்கள் நிலவுவதால், அபாயமுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனர்த்த நிலைமைகள் குறித்து மிகுந்த அவதானம் செலுத்துமாறும், தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.





# செம்பியன்பற்றுப் பகுதியில் இடம்பெற்ற விபத்து திட்டமிட்ட கொலைமுயற்சி எனக் குற்றச்சாட்டு!

(பூ.லின்ரன்)

கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் செம்பியன் பற்று பகுதியில் இடம்பெற்ற விபத்தானது பளையைச் சேர்ந்த நபரால் திட்டமிட்டுக் கொலை செய்யும் எண்ணத்துடனேயே மேற்கொள்ளபட்டது. இதற்கு எமக்கு நீதி வேண்டும் எனக் குடும்ப பெண் கோரியுள்ளார்

இச் சம்பவம் தொடர்பாக அந்தப் பெண் மேலும் கூறிய விடயங்கள் வருமாறு;

கடந்த 19 ஆம் திகதி செம்பியன் பற்று வடக்கு கடற்கரை பகுதிக்கு எனது கணவன் சென்று இருந்தார். சிறிது நேரம் கழித்து எனக்கு அழைப்பு ஒன்று வந்தது. அதில் எனது கணவன் பாரியளவு விபத்துக்கு உள்ளாகி உள்ளார் என்று கூறப்பட்டது. உடனடியாக விபத்து நடைபெற்ற இடத்திற்கு எனது மகள் சென்றார்.

விபத்து ஏற்பட்ட இடத்தில், எனது கணவனை கொலை செய்ய முயன்ற அந்தச் சந்தேக நபர் எனது மகளை கடினமான வார்த்தைகளால் பேசிவிட்டு, அப்பாக்கு பெரியளவில் விபத்து இல்லை எனக் கூறி அந்த இடத்தை விட்டு விரட்டினார்.

பின்னர் எனது கணவனுடன் விபத்துக்கு உள்ளான நபரை அந்தச் சந்தேக நபர் தமது காரில் ஏற்றிக் கொண்டு, எனது கணவனை நடு வீதியில் விட்டு விட்டுச் சென்றார்.

சுமார் அரை மணி நேரத்திற்கு பின் எனது கணவனின் அண்ணனுடன் எனது கணவனை சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்றேன்.

அதன் பின்னரே எனது கணவன் கண் முழித்த்ய் எனக்குக்கு கூறினார். “நான் விபத்துக்கு உள்ளான போது எனது காலில் சிறியளவு காயம் மாத்திரமே இருந்து. பின்னர் சிறிது நேரத்திற்கு அப்பால் காரில் வந்த பளையைச் சேர்ந்த நபர் எனது காயப்பட்ட காலிற்கு மேல் காரால் ஏற்றினார்“ என எனக்குக் கூறினார்.

இதற்கு பின்னரே இச் சம்பவம் எனது கணவனைக் கொலை செய்வதற்காகத் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்பது தெரிய வந்தது. அதன் பின்னரே என் கணவனுடன் விபத்துக்கு உள்ளான நபரை பார்த்த போது அவர் பல தடவை எனது வீட்டுக்கு முன்னால் விபத்து நடைபெற்ற நாள் சென்றார் என்பதும் தெரிய வந்தது.

இச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ய சென்ற போது அவர்கள் எந்த விதமான முறைப்பாடுகளும் என்னிடம் பதிவு செய்ய வில்லை. இன்றைய தினம் (நேற்று) எனது கணவனிடன் பொலிஸ் வாக்கு மூலம் எடுக்க சென்ற போது பொலிஸார் எனது கணவனின் எந்த விதமான முறைப்பாடுகளையும் பதிவு செய்யவில்லை.

எனது கணவனை கொலைசெய்ய முயன்ற பளையைச் சேர்ந்த நபர் அவரைத் தினமும் பார்வை யிட சென்று பலத்த தொனியில் மிரட்டுவது மற்றும் எனது உறவினர்களை வெட்டுவன் எனக் கூறி அச்சுறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார். இதற்கான ஆதாரங்களும் எம்முடம் உள்ளன.

விபத்து இடம்பெற்ற பின் இது வரை நான், எனது இரு பெண் பிள்ளைகள் வீடு போக வில்லை. எனது பிள்ளைகள் பாடசாலை செல்லவில்லை. எமக்கு இந்த நபரால் பயமாக உள்ளது. இந்த கொலைகார நபர் பல பாரியளவான குற்ற செயல்களில் ஈடுபட்டு உள்ளார். இவருக்கு பளை பொலிஸ் தமது முழுமையான ஆதரவை வழங்கி வருகிறது. – என அந்தக்குடும்ப பெண் தெரிவித்துள்ளார்.





# யாழ் பல்கலையில் கல்வி சாரா ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்பும் பணியில் குளறுபடி!

## நிர்வாகத்துக்கு எதிராக சரமாரியான குற்றச்சாட்டுகள்




எதிர்வரும் 28.10.2025 அன்று அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள யாழ்ப்பாணப் பலகலைக் கழகத்தின் பல்கலைக்கழக ஊழியா சங்கம் தீர்மானித்துள்ளது.

“யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் மீது திணிக்கப்பட்ட தொழிற் சங்கப் போராட்டம் தொடர்பான தெளிவுபடுத்தல் ஊடக அறிக்கை” என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் மற்றும் இணைச் செயலாளர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் காணப்படும் கல்வி சாரா ஊழியர்களின் 355 நிரந்தர பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி பெறுவதில் சிறு நிர்வாகத் தவறு ஏற்பட்டுள்ளது எனவும், அதேவேளை திட்டமிட்ட பின்னடிப்புச் செய்யப்பட்டுள்ளது எனவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் ஊடகச் செய்தியினூடாக கூறுகின்ற போதிலும் இங்கு உண்மையான நிலைமை வேறு என்பதனை அனைவருக்கும் தெரியப்படுத்தும் கடப்பாடு பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான எமக்கு உள்ளது.

இலங்கையில் உள்ள 17 பல்கலைக் கழகங்களிலும் காணப்படும் போதனை சாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்களில் 1400 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குவது எனும் அரச தீர்மானத்திற்கமைய அனைத்துப் பல்கலைக் கழகங்களாலும் வழங்கப்பட்ட கோரிக்கையின்படி காணப்படும் வெற்றிடங்களில் 67 வீத வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டு பெரும்பாலான பல்கலைக்கழகங்களினால் அவற்றிற்கான ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவது பத்திரிகை விளம்பரங்கள் மூலம் அனைவரும் அறியமுடியும்.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் 355 பதவி வெற்றிடங்களில் 67 வீதமான 237 இற்குமதிகமான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியில் ஆக 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்படுவது தனியே பல்கலைக்கழக சமூகம் மாத்திரமன்றி எமது சமூகத்தின் இளம் தொழில் தேடுவோரே. எனவே இந்நிலைமைக்கு யார் பொறுப்பு கூறுவது எனும் கேள்வி எம் மத்தியில் எழுந்துள்ளது.

இவ் வெற்றிடம் நிரப்பும் பொறிமுறை உருவாக்கத்தில் எமது உழைப்பு மிகவும் பெரியது. 2023 ஆம் ஆண்டு வெற்றிடங்களை நிரப்பும் வேண்டுகோளை அனைத்து பல்கலைக்கழக தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் ஊடாக முன்னுரிமைப்படுத்தியது யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கமே. அதனைத் தொடர்ந்து இவ் அரசுக்கும் அழுத்தங்களை கொடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை வழங்குவதில் திறைசேரி காட்டிய தாமதங்களை சுட்டிக்காட்டி அனுமதியை உயர்கல்வி அமைச்சு அதிகாரிகள் கொண்ட குழுவாக மாற்றி அமைத்ததிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் பெரும்பங்கு உள்ளது. இது இவ்வாறு இருக்க எமது வெற்றிடங்கள் இன்று நிரப்பப்படாத நிலைமை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கோரிக்கைக் கடிதங்களில் காணப்படும் தவறுகளை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்துரையாடல்களில் (20.03.2025, 30.09.2025) தெளிவுபடுத்தி இருந்த போதிலும் அதில் பல்கலைகழக மானியங்கள் ஆணைக் குழு அக்கறை செலுத்தாது பல்கலைக் கழகத்தின் தவறை அவர்களே சீர் செய்ய வேண்டும் எனக் கூறி இன்று அதற்கான அனுமதி கிடைக்கப்பெறாததற்கு அவர்களும் பொறுப்பானவர்கள் ஆவார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 355 வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தனது கோரிக்கை கடிதத்தில் வெறும் 117 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அனுமதி கேட்டுள்ளது. இது தவறென நாங்கள் பல தடவை சுட்டிக் காட்டியும் இன்று வரை மாற்றப்படவில்லை. இதற்கான காரணம் வேலையாள்கள் தரம் மற்றும் பொறியியல் சேவைகளில் காணப்படும் தரங்களுக்கான வெற்றிடங்கள் முறையற்ற விதத்தில் தனியார் நிறுவனங்களின் ஊடாக நிரப்பப்படுகின்றன. இது தற்காலிகமானது என பதிவாளர் கூறியிருந்த போதிலும் எதற்காக அனுமதிக் கடிதத்தில் அவ்வெற்றிடங்கள் வெளிப்படுத்தப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது என்பது எமக்கு இன்னும் பலவித ஐயத்தை ஏற்படுத்தியிருந்தது. கோரிக்கை கடிதத்தில் தவறு மட்டுமல்லாது கடிதம் அனுப்புவதிலும் பல நிர்வாக தவறுகளை எமது பல்கலைக்கழகம் வேண்டுமென்றே ஏற்படுத்தியதாகவே நாம் கருத வேண்டியுள்ளது. ஏனெனில் கல்வி சார் ஊழியர்களுக்கான அனுமதி கடிதம் சரியான முறையில் சென்று சேர்ந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. அதற்கான ஒரு தொகுதி அனுமதியும் கிடைக்க பெற்றுள்ளது. எனவே பதிவாளர், துணைவேந்தர் ஆகியோரின் அசமந்த செயற்பாடு இன்று எம்மை தொழிற்சங்கப் போராட்டத்தை ஏற்படுத்தத் தூண்டி உள்ளது

அது மட்டுமல்லாது, நாம் இது தொடர்பாக 4 கடிதங்களை எமது பேரவைத் தலைவருக்கு சமர்ப்பித்திருந்த போதிலும் இன்றுவரை அது பேரவையினால் கலந்துரையாடப்படவில்லை. இறுதியாக நாம் வழங்கிய கடிதத்திற்கு பதிவாளரினாலேயே பதில் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் ஒரு மேம்போக்கான பதிலாகவே காணப்படுகின்றது. இவ்வளவு நிர்வாகத் தவறுகள் திரும்பத் திரும்ப ஏற்பட்டிருந்த போதிலும் தாம் சிறு தவறை இழைத்தனர் எனவும் இது உயர் கல்வி அமைச்சின் திட்டமிட்ட தாமதப்படுத்துதல் செயல்பாடு எனவும் அவர்கள் மீது குற்றத்தை சுமத்தி பத்திரிகை செய்தி வெளியிட்டு அரசியல் சாயம் பூசும் செயற்பாடாகவே நாம் இதை கருதுகிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக போதனை சாரா ஊழியர்களாகிய நாம் எமது பல்கலைக்கழகத்தின் மாண்பையும், எதிர்கால சந்ததியினராகிய எமது மாணவர்களின் மீது எமக்குள்ள சமூகப் பொறுப்பையும் கருத்திற்கொண்டு பொருளாதார சுமையால் பாதிக்கப்பட்டிருந்த எமது அரசின் கொள்கைகளுக்கு மதிப்பளித்தும் எமது நிரந்தர ஆளணியினரில் மூன்றில் ஒரு பங்கிற்கும் (355 இற்கு) அதிகமான ஊழியர்கள் நிரந்தர நியமனம் செய்யப்படாமையால் ஏற்பட்ட பணிச் சுமைகள், அண்மையில் 4 பீடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டதானால் ஏற்பட்ட பணிச்சுமை தவிர அதன் காரணமாக உரிய வேளையில் எமக்குக் கிடைக்கப் பெறவேண்டிய பல நன்மைகளை இழந்த போதும் எமது கடமைகளை சிறப்பாகச் செய்து எமது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருப்பதுடன் காலத்திற்குக் காலம் எமது நியாயமான கோரிக்கைகளையும், உரிமைகளையும் எழுத்து வடிவிலும் கலந்துரையாடல்கள் மூலமும் இன்னும் இயலுமான வழிகளில் முன்வைத்து வந்துள்ளோம்.

அவற்றில் மிகவும் முக்கியமான கோரிக்கையாக ஆளணி நிரப்புதலே இடம் பெற்றிருந்தது என்பதுடன் இவ்விடயம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் எம்மால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

1. நிரந்தர ஆளணி நிரப்புவதில் ஆர்வம் காட்டாது தற்காலிக ஆளணியினரை பொருத்தமற்ற வழிகளில் நிரப்புவதில் முனைப்புக் காட்டுவதை பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தோம்.

2. நிர்வாகத்தினால் முன்வைக்கப்பட்ட போதனை சாரா ஊழியர்களின் ஆளணி நிரப்புதல் தொடர்பான கோரிக்கைகளில் 355 வெற்றிடங்களும் இருந்த போதும் 117 வெற்றிடங்களே கோரப்பட்டுள்ளது. குறிப்பாக அலுவலக உதவியாளர்களுக்கான (Work aids) 107

தொடர்ச்சி▼

# யாழ் பல்கலையில் கல்வி சாரா ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்பும் பணியில் குளறுபடி!

## நிர்வாகத்துக்கு எதிராக சரமாரியான குற்றச்சாட்டுகள்

தொடர்ச்சி▲

வெற்றிடங்கள் உட்பட 238 இற்கும் அதிகமான வெற்றிடங்கள் தனியார் நிறுவனங்களுடாகவும், சுற்றுநிரூபங்களிற்கு முரணாகவும் உள்வாங்கப்பட்டு ஓர் சேவை ஒப்பந்தத்தினுடாக செய்வது தவறு என்றும் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டியிருந்தோம்.

3. அவ்வாறே முன்வைக்கப்பட்ட போதனை சாரா ஊழியர்களின் ஆளணி நிரப்புதல் தொடர்பான கோரிக்கைகளில் போதுமான நியாயப்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என 20.03.2025 பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டதையும் சுட்டிக் காட்டியிருந்தோம்.

4. ஏனைய பல்கலைக்கழகங்கள் இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பிடம் நேரிற்சென்று தமது கோரிக்கைகளை முன்வைத்து அடிக்கடி அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர். எனவே எமது நலனில் அக்கறை கொண்டவர்களாக எமது நிர்வாகமும் நேரிற் சென்று தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கும் படியும் கோரியிருந்தோம்.

5. மேலும் நிர்வாகத்தின் நடவடிக்கைகளுக்கு பலம் சேர்க்கும் வகையில் நாமும் உரிய தரப்புக்களுக்கு அழுத்தம் வழங்கும் பொருட்டு மேற்படி விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தொடர்பாடல் பிரதிகளை வழங்கி உதவும்படியும் கோரியிருந்தோம்.

6. அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனம் ஊடான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சுடனான கலந்துரையாடல்களிலும் ஊழியர் நிரந்தர நியமனம் தொடர்பான விடயத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினராகிய நாமே கலந்துரையாடல்களுக்குள் உள்ளடக்கி எம்மால் ஆன அழுத்தங்களை பிரயோகித்திருந்தோம்.

ஆயினும் மேற்படி விடயம் தொடர்பில் நாம் கொண்டிருந்த கரிசனையில் எள்ளளவு கரிசனை கூட பல்கலைக்கழக நிர்வாகத்தினால் கொள்ளப்படவில்லை என்பது எமக்கு மிக வேதனையை தருகின்றது.

மேலும் நியமனம் தவிர ஊழியர், மாணவரின் அடிப்படை நலன் சார்ந்த பல விடயங்களை நாம் பல தடவை எமது கோரிக்கைகளாக முன் வைத்த போதும் அவை தொடர்பிலும் இதுவரை ஆக்க பூர்வமான திர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை என்பதனையும் இங்கு வேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றோம்.

பொதுவெளியில் நாம் அமைதி காத்த போதும் பத்திரிகைச் செய்திகள் ஊடாக, எமது பொறுமையின் எல்லையைக் கடக்க வேண்டிய சூழ்நிலையினை ஏற்படுத்தி விட்டதோடு மேலும், இலகுவாகச் செயற்படுத்த கூடிய ஊழியர் மற்றும் மாணவர் நலன் சார்ந்து எம்மால் முன்வைக்கப்பட்ட சிறு விடயங்களைக் கூட இது வரை ஆக்க பூர்வமாக தீர்க்கத் தவறியதன் மூலம், நிர்வாகத்தின் உறுதி மொழிகளையோ, வாய் வார்த்தைகளையோ மீண்டும் மீண்டும் நம்ப முடியாத நிலைக்கு எம்மை தள்ளியுள்ளார்கள்.

எது, எவ்வாறு இருந்தபோதிலும் இன்று முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டது எமது சமூகமே. இனி இதற்கான அனுமதிகள் எத்தனை ஆண்டுகள் தாமதிக்குமோ எமக்குத் தெரியாது. ஆனால், உயர் கல்வி அமைச்சு தெரிவுஜ் குழுவின் பரிந்துரைப்படி மற்றைய பல்கலைக்கழகங்களின் கோரிக்கைகளில் 67 வீதம் கிடைக்கப் பெற்ற அதே தொகையை ஏறத்தாழ 230 வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி கிடைக்கப்பெறும் வரை எமது போராட்டம் தொடரும். அது மட்டும் அல்லாது எமது பல்கலைக்கழக நிர்வாகத்துடன் கலந்துரையாடி ஏற்றுக்கொள்ளப்பட்ட 26 விடயங்களும் இன்று ஒரு வருடத்திற்கு மேலாக கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. இதற்கான தீர்வுகளும் இதுவரை கிட்டப்படவில்லை. இது திட்டமிட்டு கல்வி சாரா ஊழியர்களின் செயல் திறனை முடக்குவாதம் கி பல்கலைக் கழகத்தினை நலிவுப்படுத்தும் செயற்பாடாகவே நாம் கருதுகிறோம்.

எனவே, எமது ஊழியர் சங்க விசேட பொதுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி உரிய தரப்புகளுக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக எதிர்வரும் 28.10.2025 அன்று அடையாள வேலை நிறுத்தம் ஒன்றினை மேற்கொள்வதுடன், எமது நியாயமான கோரிக்கைகள் அனைத்திற்கும் நியாயமான தீர்வு கிடைக்காதபட்சத்தில் எமது தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்தி அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் விஸ்தரிப்பது எனவும் தீர்மானித்துள்ளதை மிகவும் மன வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். – என்று உள்ளது.

# நுவரெலியா டயகம பிரதேச வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பு

(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா மாவட்டம், டயகம பிரதேச வைத்தியசாலையில் கடந்த இருபதாம்திகதிநோயாளிஒருவருடன்போதையுடன் வருகை தந்த நபர் வைத்தியசாலை வைத்தியர்களுக்கு மரண எச்சரிக்கை விடுத்தமையாலும் மற்றும் பிரதேச வைத்தியசாலையின் சாரதியை தாக்கிய விடயம் சம்பந்தமாக இரண்டு நாள்களாக வைத்தியசாலையில் வைத்தியர்கள், ஊழியர்கள் பணிக்கு செல்லாமல் வைத்தியசாலை மூடப்பட்டிருக்கும் நிலை காணப்படுகிறது.

இந்த விடயம் சம்பந்தமாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தும் வைத்தியர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு இல்லாத ஒரு காரணத்தினாலேயே இவ்வாறு கடமை புரியும் வைத்தியர்கள் தாங்கள் பணியில் இருந்து விலகி உள்ளனர் என ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தனர்.

இந்த விடயம் சம்பந்தமாக வைத்திய அதிகாரி சங்கத்தின் நுவரெலியா மாவட்ட கிளையின் செயலாளர் வைத்தியர் ஜகத் திசாநாயக்க மற்றும் வைத்தியர் மினோசா வெலிகன்ன ஆகியோர் இன்று ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு




செய்திருந்தனர். இதன்போது அவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 20!ஆம் திகதி அடிபட்டு காயத்துடன் வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிக்கும் போது அவரது மேலதிக சிகிச்சையை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பத்தில் ஏன் தாமதமாகின்றது எனக் கேள்வி கேட்டு சாரதியையும் தாக்கியுள்ளனர்.


அத்தோடு எங்களையும் தாக்க முற்பட்டனர். தகாத வார்த்தை பிரயோகங்கள் பிரயோகித்தனர்.

இதனால் நாம் பொலிஸாருக்கு அறிவித்தும் பொலிஸார்ர் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் மௌனம் காத்தனர்.

அத்தோடு அன்று இரவு நாங்கள் எமது விடுதியில் தங்கியிருக்கும் போது பட்டாசுகளை வீசி அச்சுறுத்தினர்.

இந்த விடயம் சம்பந்தமாக நுவரெலியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிக்கு நாம் தெரிவித்து பணியில் இருந்து தற்காலிகமாக நாங்கள் விலகி உள்ளோம்.

எங்களுக்கு சாதாரணமான ஒரு தீர்வு மற்றும் பாதுகாப்பு கிடைக்கும் பட்சத்தில் நாம் கடமை புரிவதற்கு ஆயத்தமாக உள்ளோம். – என கருத்து தெரிவித்தனர்.




# இன்று ஐக்கிய நாடுகள் தினம் உலக ஒற்றுமையின் சின்னம்



- நடராசா கோபிராம் -
(உளவியல் சிறப்புக் கலை மாணவன்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24ஆம் திகதி, உலகம் முழுவதும் ஐக்கிய நாடுகள் தினம் (UnitedNations Day) அனுசரிக்கப்படுகிறது. 1945ஆம் ஆண்டு இதே நாளில், இரண்டாம் உலகப் போருக்குப் பின் மனித குலம் அனுபவித்த பேரழிவை மறந்து விடாமல், உலக நாடுகள் ஒன்று சேர்ந்து அமைதி, மனித உரிமைகள் மற்றும் ஒற்றுமைக்காக "ஐக்கிய நாடுகள் சாசனம்" (UN Charter) மீது கையொப்ப மிட்டன. அதுவே இந்த தினத்தின் ஆரம்பம். இந்த நாள் ஒரு நினைவு நாளாக மட்டுமல்லாமல், "இன்னும் நாம் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுகிறோமா?" என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

2025ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் நிறுவனம் தனது 80ஆவது ஆண்டை கொண்டாடுகிறது. இந்த மைல் கல், மனித சமூகம் எவ்வளவு முன்னேறியுள்ளது என்பதையும், இன்னும் எத்தனை சவால்கள் எஞ்சியுள்ளன என்பதையும் நினைவூட்டுகிறது. கடந்த 8 தசாப்தங்களாக ஐ.நா உலகளவில் மனித வளர்ச்சிக்கும், மனிதாபிமான உதவிகளுக்கும், நிலைத்த வளர்ச்சி இலக்குகள் முன்னேற்றத்துக்கும் பெரும் பங்காற்றியுள்ளது. ஆனால் இதே சமயம், அதன் திறன் மற்றும் பொருத்தம் குறித்த கேள்விகளும் எழுந்துள்ளன. அரசியல் வேறுபாடுகள், போர்கள், பொருளாதார இடர்பாடுகள் ஆகியவை உலக ஒற்றுமையையே சோதனைக்குள்ளாக்குகின்றன.

### சமூக விழிப்புணர்வும் படைப்பாற்றலும்

ஐக்கிய நாடுகள் தினம் வெறும் தினமல்ல – அது ஒரு சமூக விழிப்புணர்வு நாள். இந்த நாளில், உலகப் பிரச்சினைகள் எல்லாம் ஒருவரின் வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பள்ளிகளில் கொடி ஏற்றல் விழாக்கள், அமைதி உரைகள், ஓவியம் மற்றும் கட்டுரை போட்டிகள் போன்றவை நடக்கின்றன. சமூக ஊடகங்களில் UnitedNationsDay போன்ற ஹாஸ்டேக்குகளின் வழி அமைதி மற்றும் ஒற்றுமை குறித்த விழிப்புணர்வை இளைஞர்கள் பரப்புகிறார்கள்.

2025ஆம் ஆண்டில், ஐ.நா 'UN80 Initiative' என்ற முயற்சியை முன்னெடுத்து வருகிறது. இது, செயற்கை நுண்ணறிவு, காலநிலை மாற்றம், வறுமை மற்றும் சமத்துவமின்மை போன்ற புதிய சவால்களை எதிர்கொள்ள தரவுகள் சார்ந்த, துரிதமான, தொழில்நுட்ப அடிப்படையிலான புதிய அமைப்பை உருவாக்குகிறது.

தற்போது உலகம் பல போர்களால் அதிர்கிறது. உக்ரைன், மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா போன்ற பல இடங்களில் மோதல்கள் தொடர்கின்றன. இதனால், "போர்களிலிருந்து எதிர்கால தலைமுறைகளை காப்பது" என்ற ஐ.நா நோக்கம் இன்னும் பொருந்துகிறது.


### உலகளாவிய பார்வை

ஐக்கிய நாடுகள் தற்போது 193 உறுப்புநாடுகளைக் கொண்ட ஓர் உலக அமைப்பு. அதன் முக்கிய இலக்கு – அமைதி, சமத்துவம், முன்னேற்றம். பொதுச் சபை, பாதுகாப்புக் கவுன்சில், பொருளாதார மற்றும் சமூக கவுன்சில், சர்வதேச நீதிமன்றம், செயலாளர் அலுவலகம் ஆகியவை அதன் முக்கிய பிரிவுகள். உலகப் போர்கள், பஞ்சம், நோய்கள், காலநிலை நெருக்கடி, அகதிகள் பிரச்சினை ஆகியவை ஒரே நேரத்தில் உலகைச் சிக்கலில் ஆழ்த்துகின்றன. இதை சமாளிக்க உலகம் மறுபடியும் ஒற்றுமையின் சக்தியை நினைவுகூர வேண்டும்.

### இலங்கையின் பங்கு மற்றும் தற்போதைய நிலை

இலங்கையிலும் இந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஐ.நா இலங்கை அலுவலகம் 2024 ஆம் ஆண்டில் சுமார் 80 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் பல்வேறு சமூக மேம்பாட்டு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. 'SDG Half-time–வேகமான முன்னேற்றம்" என்ற தலைப்பில் 2023 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்ட ஐ.நா தினம், இலங்

தொடர்ச்சி▼




# இன்று ஐக்கிய நாடுகள் தினம் உலக ஒற்றுமையின் சின்னம்

தொடர்ச்சி▲

கையில் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் அவசரத் தேவையை வலியுறுத்தியது. பொருளாதார சிக்கல்கள், சமூகச் சவால்கள், காலநிலை மாற்றங்கள் ஆகியவற்றால் இலங்கையில் பல இலக்குகள் பின்தங்கியுள்ளன.

இலங்கையின் பார்வையில், இந்த நாள் உலக இலக்குகள் மற்றும் உள்ளூர் நடவடிக்கைகளுக்கு இடையிலான பாலமாகஒ பார்க்கப்படுகிறது. உதாரணமாக, யாழ்ப்பாணத்தில் உள்ள சமூகங்கள் SDG 13 (காலநிலை நடவடிக்கை) குறித்து கடற்கரை கரை சிதைவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். பல மொழிகளில் (தமிழ், சிங்களம்) விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி “யாரும் பின்தங்கக்கூடாது” என்ற இலக்கை வலுப்படுத்தலாம்.

### படைப்பாற்றல் முயற்சிகள்

இலங்கையில் ஐ.நா தினத்தை படைப்பாற்றலுடன் கொண்டாடலாம்.

மாணவர்கள் 193 நாடுகளின் கொடிகளுடன் கூடிய “அமைதியின் ஓவியம்” உருவாக்கலாம்.

“ஒரு நாள் – ஒரு பணி” எனும் முயற்சியில், கடற்கரை சுத்தம், மரநடுதல், முதியோருக்கு உதவி போன்ற சேவைகள் செய்யலாம்.

'UN Day Live' என்ற சமூக ஊடக நிகழ்ச்சிகள் நடத்தி, இளைஞர்களின் கருத்துக்களைப் பகிரலாம்.

“நான் உலக குடிமகன்” என்ற தலைப்பில் சிறுகதை, ஓவியம், உரை போன்ற போட்டிகள் ஏற்பாடு செய்யலாம்.

இந்த முயற்சிகள் அனைத்தும் உலகளாவிய இலக்குகளை உள்ளூர் மட்டத்தில் நிறைவேற்றும் முயற்சிகளாக அமையும்.

### ஆதாரங்களும் தகவல்களும்

UN Sri Lanka சமூக முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமத்துவம் ஆகியவை இலங்கையில் முன்னுரிமை பெறுகின்றன.

ஐ.நா. பொதுச் செயலாளர் “பெண்கள் உரிமைகள் மீண்டும் தாக்குதலுக்கு உள்ளாகின்றன் நாம் எதிர்த்து நிற்க வேண்டும்” எனக் கூறியுள்ளார்.

**UN80 Initiative:** 21ஆம் நூற்றாண்டுக்கேற்ற தொழில்நுட்ப மாற்றங்கள், AI நெறிமுறைகள், பசுமை ஆற்றல் ஆகியவற்றை முன்னெடுக்கிறது.

அக்டோபர் 24ஆம் தேதியன்று உலக நாடுகள் அனைத்தும் ஒரே எண்ணத்துடன் நின்று “நாம் ஒன்றே மனித குடும்பம்” என்று நினைவூட்டுகின்றன. இலங்கையிலும், உலகத்தின் பிற பகுதிகளிலும், இந்த நாள் அமைதி, ஒற்றுமை, சமத்துவம், வளர்ச்சி ஆகியவற்றின் உண்மையான அர்த்தத்தை வாழ்வில் நடைமுறைப்படுத்தும் நாளாக மாற வேண்டும்.

“நாட்டின் குடிமகனாக மட்டுமல்ல, உலகத்தின் குடிமகனாகவும் நாம் எண்ண வேண்டும்“ – இதுவே ஐக்கிய நாடுகள் தினத்தின் உண்மைச் செய்தி.

அமைதிக்காக செயல் படுவோம், நிலைத்த வளர்ச்சிக்காக ஒன்றுபடுவோம், மனித நேயத்தின் பெயரில் உலகம் முழுவதும் ஒளியைப் பரப்புவோம்.





# லண்டன் நாட்டிய உலகில் ‘நர்த்தன கலாலயம்’......!

நாட்டிய உலகில் சிறப்பாக இங்கிலாந்தில் நாற்பது ஆண்டுகள் சிறந்த நடனச் சேவையை வழங்கி வரும் நர்த்தன கலாலயம், தனது நாற்பதாவது ஆண்டின் அறுவடையாக நர்த்தன உற்சவம் என்ற நடன நிகழ்ச்சியை கடந்த 18 ஆம் திகதிசனிக் கிழமை எட்மன்ரன் சில்வர் வீதியில் அமைந்துள்ள மில்வீல்ட் தியேட்டரில் மண்டபம் நிறைந்த பார்வை யாளர்களோடு சிறப்பாக நடத்தியது.

நர்த்தன கலாலய அதிபரும் அதன் ஸ்தாபகரு மான திருமதி பத்மினி குணசீலனின் நெறியாள்கை யில் 70க்கும் மேற்பட்ட அவரது மாணவிகள், அந்த மாணவிகளின் மாணவிகள் என அரங்கம் நிறைந்த நிகழ்ச்சிகள், பார்வையாளர்களை குதூகலத்திலும் வியப்பிலும் ஆழ்த்தியது.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து கர்நாடக இசையிலும் சிறந்தவரான சங்கீத வித்துவான் திருமதி பத்மினியின் மாணவர்களின் இசைக்கச்சேரியுடன் நிகழ்வு ஆரம்பமானது. கச்சேரி விறுவிறுப்பாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆசிரியரின் மாணவிக ளும் தற்போது ஆசிரியர்களாகத் திகழும், சாரங்கா குணசீலன், அனுஷா சஜீவ், நிரூஜா குணரூபன், பானுமஞ்சரி கந்தஞானி ஆகியோரின் மாணவிக ளின் நடனங்கள் சிறப்பாக இளஞ்சிட்டுக்களின் வர்ண ஜாலங்கள்போல் கவர்ச்சிகரமாக இருந்தன.

முருகன் பாடல்களுக்கு சாரங்காவின் மாணவிக ளின் நிகழ்ச்சி தொடர்ந்து நடனங்களில் நவரச பாவனைகள், விறுவிறுப்பான தில்லானா நடன நிகழ்ச்சிகள் கண்களுக்கு விருந்தாக அமைந்ததுடன்

தொடர்ச்சி▼









# லண்டன் நாட்டிய உலகில் ‘நர்த்தன கலாலயம்’......!

தொடர்ச்சி▲

மேலைத்தேய நடனங்களுக்கு இணையாக சில இடங்களில் அவற்றையும் விஞ்சி அமைந்ததாக அவையோர் கருத்துப் பரிமாறியதை அவதானிக்கக்கூடியமாக இருந்தது.

இடைவேளையைத் தொடர்ந்து அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் புலவர் சிவநாதனின் எழுத்தாற்றலில் இராமகிருஷ்ணனின் சிறந்த இராக அமைப்புக்களுடன், 58 நிமிடங்கள் தீராத விளையாட்டுப் பிள்ளை என்ற நாட்டிய நாடகம் இடம் பெற்றது. எந்தவித இடைவெளியும் இன்றி நடனத்தாரகைள் மேடையின் இருபக்கங்களிலும் இருந்தும் சாரிசாரியாக தொடர்ச்சியாக நடனமாடி மகிழ்வித்தனர். மேடைத்திரையில் அழகழகாக அந்தந்த காட்சிகளின் வர்ணனைகள் கதைபேசிக்கொண்டு இருந்தன. கிருஷணரின் அனைத்து அவதாரங்களும் இரத்தினச் சுருக்கமாக மேடையின் நடனமாக வெளிவந்தவண்ணம் இருந்தன. நடனமாடிக்கொண்டிருந்த அதே மாணவிகள் வெவ்வேறு பாத்திரங்களில் நடனமாடியமை பார்வையாளர்களுக்கு விந்தையாகவும் பரவசமாகவும் அமைந்திருந்தன.

அதற்கும் மேலாக் குரு பத்மினி குணசீலன் மேடையேறி நடனமாடி மண்டபம் நிறைந்த கரகோசங்களைப்பெற்று மகிழ்வித்ததோடு தனது மாணவர்களுக்கும் ஆச்சரியத்தையும் அளித்தமை குறிப்பிடத்தக்கது.

திருமதி பத்மினி குணசீலன் அவர்கள் இந்தியாவில் நடனத்தைப்பயின்று இலங்கையில் 10 வருடங்கள் பல மாணவர்களுக்கு பயிற்றுவித்து 1885 ஆம் ஆண்டு முதல் இன்று வரை லண்டன் மாநகரில் விதைத்த விளைச்சலின் அறுவடையை அமோகமாகப் பெற்றுள்ளார் எனபது கண்கூடு. வாழ்க நர்த்தன கலாலயம். வாழ்க திருமதி பத்மினி குணசீலனும் அவர்தம் மாணவிகளும்.

**தகவல்:-கவிஞர் பாலரவி**










# 80 ஆண்டுகால உலகளாவிய நம்பிக்கை...!

**(ஐக்கிய நாடுகள் தினம் - ஒக்ரோபர் 24)**

ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 24ஆம் திகதி உலக நாடுகள் அனைத்தும் ஐக்கிய நாடுகள் சபையின் (United Nations - UN) பிறந்த நாளைக் கொண்டாடுகின்றன. இந்தத் தினம், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் உலக அமைதிக்கான மனித குலத்தின் உறுதியான அர்ப் பணிப்பை நினைவூட்டுகிறது. இந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை என்ற மாபெரும் அமைப்பு, அதிகார பூர்வமாக நடைமுறைக்கு வந்து 80 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

**ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்**

இரண்டாம் உலகப் போர் ஏற்படுத்திய பேரழிவை நாம் எந்தக் காலத்திலும் மறக்க முடியாது. கோடிக் கணக்கான உயிர்கள் பலியானதோடு, உலகப் பொரு ளாதாரமும், சமூக அமைப்பும் சீர்குலைந்தன. “இனி ஒரு போர் வரக்கூடாது” என்ற ஒற்றை நோக்கம் மட்டுமே அப்போது உலக நாடுகளின் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. அந்த நோக்கம் தான் ஏற்கனவே இருந்த ‘சர்வதேச சங்கம்’ (League of Nations) தோல்வி யடைந்த நிலையில், அதைவிட வலுவான ஓர் அமைப்பை உருவாக்க வேண்டிய தேவையை உலகத் தலைவர் களுக்கு உணர்த்தியது.

அமெரிக்க அதிபர் பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் அவர்களால் “ஐக்கிய நாடுகள்” (United Nations) என்ற பெயர் சூட்டப்பட்ட இந்த அமைப்புக்கான சாசனம், 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி சான் பிரான்சிஸ்கோவில் 50 நாடுகளின் பிரதிநிதிகளால் கையெழுத்திடப்பட்டது. பின்னர், போலந்து கையெழுத்திட்ட பிறகு உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 51 ஆனது. இந்தச் சாசனத்தை பெரும்பாலான நாடுகள் அங்கீகரித்த பின்னரே சீனா, பிரான்ஸ், சோவியத் யூனியன், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளுடன், பெரும்பான்மை நாடுகளாலும் சாசனம் அங்கீகரிக்கப்பட்டதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. அன்று முதல், இந்தத் தினமே ஐ.நா. தினமாகக் கொண்டாடப்படுகிறது. அன்று முதல், உலக அமை திக்கும் ஒத்துழைப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கும் ஒரு சர்வதேச அமைப்பாக இது செயல்பட்டு வருகிறது. இதன் தலைமைச் செயலகம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.

**அமைப்பும் அதன் நோக்கங்களும்**

ஐக்கிய நாடுகள் சபை என்பது வெறும் ஒரு கட்டடம் அல்ல. அது ஆறு முக்கிய தூண்கள் கொண்ட ஒரு மாபெரும் கட்டமைப்பாகும். அவை:

1. ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (General Assembly)

இதில் 193 உறுப்பு நாடுகளுக்கும் சம உரிமை உண்டு. இது ஓர் உலக நாடாளுமன்றம் போலச் செயல் பட்டு முக்கியமான முடிவுகளுக்குப் பரிந்துரைகளை அளிக்கிறது.

2. பாதுகாப்புச் சபை (Security Council)

ஐ.நாவின் மிக சக்திவாய்ந்த அங்கம் இதுதான். உலக அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுவது இதன் முதன்மைப் பொறுப்பாகும். இதில் ஐந்து நிரந்தர உறுப்பினர்களும் (அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து) பத்து சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படும் நிரந்தரம் அல்லாத உறுப்பினர்களும் உள்ளனர்.

3. பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC)

உலக மக்களின் பொருளாதாரம், சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் மனித உரிமைகளுக்காகப் பாடுபடுகிறது.

4. செயலகம் (Secretariat)

இதன் தலைவராக ஐ.நா. பொதுச்செயலாளர் செயல்படுகிறார். இது ஐ.நாவின் அன்றாடப் பணிகளைச் செய்கிறது.

5. சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice)

உறுப்பு நாடுகளுக்கு இடையேயான சட்டப் பிரச்சினைகளைத் தீர்க்கும் அமைப்பாக நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் செயல்படுகிறது.

6. நம்பிக்கை பொறுப்புச் சபை (Trusteeship Council)

இது 1995 இல் செயலிழந்தது.

இந்த அமைப்பின் அடிப்படை நோக்கங்கள் மிகவும் தெளிவானவை. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுவது, நாடுகளுக்கு இடையே நட்புறவை மேம்படுத்துவது, அத்துடன் பொருளாதாரம், சமூகம், கலாசாரம் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுவது, இனம், மொழி, மதம் போன்ற பாகுபாடுகள் இன்றி, மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும்

தொடர்ச்சி▼

# 80 ஆண்டுகால உலகளாவிய நம்பிக்கை...!

## (ஐக்கிய நாடுகள் தினம் - ஒக்ரோபர் 24)

தொடர்ச்சி▲

மதிப்பளிப்பதை ஊக்குவிப்பதுதான் இதன் மிக முக்கியமான கடமையாகும். இன்று உலகில் 193 நாடுகள் உறுப்பினர்களாக இருக்கின்றன.

**80 ஆண்டுகாலப் பயணம்**

கடந்த எட்டு தசாப்தங்களில், ஐக்கிய நாடுகள் சபை எண்ணற்ற சவால்களை எதிர்கொண்டு, பல முக்கியமான சாதனைகளைப் படைத்துள்ளது. இதன் மிக முக்கிய சாதனை, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஒரு மூன்றாவது உலகப் போரைத் தடுத்ததுதான். உறுப்பு நாடுகளுக்கு இடையே உள்ள மோதல்களைத் தீர்க்க இது பேச்சுக்கான ஒரு தளமாகச் செயல்படுகிறது. மேலும், உள்நாட்டுப் போர்கள் மற்றும் மோதல் பகுதிகளில் அமைதியைக் காக்க ஐ.நா. அமைதி காக்கும் படைகள் அனுப்பப்படுகின்றன.

சமூக வளர்ச்சியில் இதன் பங்கு மகத்தானது. யுனிசெஃப் (UNICEF), உலக சுகாதார நிறுவனம் (Wu;O), உலக உணவுத் திட்டம் (WFP) போன்ற அதன் சிறப்பு நிறுவனங்கள் மூலம், உலகெங்கிலும் உள்ள குழந்தைகளின் நல்வாழ்வு, ஆரோக்கியம் மற்றும் வறுமை ஒழிப்புக்காக ஐ.நா மிகப்பெரிய அளவில் பணியாற்றியுள்ளது. குறிப்பாக, 2030 ஆம் ஆண்டுக்குள் உலகம் அடைய வேண்டிய 17 நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) நிர்ணயித்து, வறுமையை ஒழித்தல், அனைவருக்கும் தரமான கல்வி, பாலின சமத்துவம் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற முக்கியப் பிரச்சினைகளுக்கு உலக நாடுகளை ஒருங்கிணைத்துத் தீர்வுகாண முயற்சிக்கிறது.

**2025 இல் உள்ள சவால்களும் எதிர்பார்ப்பும்**

80 ஆண்டுகள் கடந்த பிறகும் ஐ.நா. அமைப்பு பல சவால்களை எதிர்கொள்கிறது. இன்றைய உலகின் பல பகுதிகளில் நடக்கும் சர்வதேச மோதல்கள், உள்நாட்டுப் போர்கள் மற்றும் எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஐ.நா. சில நேரங்களில் தடுமாறுகிறது. இதற்கு முக்கியக் காரணம், பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள் (Veto Power) காரணமாக, அவசர முடிவுகள் எடுப்பதில் தாமதம் ஏற்படுவதுதான். அத்துடன், காலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய அச்சுறுத்தல்களுக்கு எதிராகப் போராட, உலகளாவிய ஒத்துழைப்பை ஐ.நா. மேலும் வலுப்படுத்த வேண்டும். உலகளாவிய ஒத்துழைப்பின்மை, வறுமையும் ஏற்றத்தாழ்வும் போன்ற சவால்களும் நீடிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் தினம் என்பது வெறுமனே ஒரு நாள் கொண்டாட்டம் அல்ல. அது உலக மக்கள் அனைவரும் ஒரு குடும்பம் என்பதை நினைவுபடுத்தும் நாள். இந்த அமைப்பு வெறும் அதிகார மையமாக மட்டும் இல்லாமல், உலகின் கடைசி மூலையில் வாழும் ஏழைக் குடிமகனுக்கும் பாதுகாப்பு, நீதி, சமத்துவம் ஆகியவற்றை உறுதி செய்யும் ஓர் அமைப்பாகத் திகழ வேண்டும். ஐ.நாவின் சாசனம் கூறியது போல, நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் சிக்கல்களைப் போரின்றி, அமைதியான பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும்.

இன்று, ஒக்ரோபர் 24, 2025, நாம் ஐக்கிய நாடுகள் தினத்தைக் கொண்டாடுகிறோம். இந்த 80 ஆண்டுகால வரலாற்றில், ஐ.நா. அமைப்பு உலக அமைதிக்கும், மனித குல மேம்பாட்டுக்கும் ஆற்றிய பணிகளை நாம் போற்றுவோம். உலகளாவிய சவால்களுக்குத் தீர்வு காணும் ஆற்றல் நம்மிடம் உள்ளது. இதற்குத் தேவைப்படுவது வெறுமனே சட்டங்களோ, ஒப்பந்தங்களோ அல்ல. உறுப்பு நாடுகளின் நேர்மையும், உலக மக்கள் அனைவரின் மீதான அக்கறையும் தான். ஒரு சிறந்த, அமைதியான, சமத்துவமான உலகை நம் வருங்கால தலைமுறையினருக்கு விட்டுச் செல்வோம் என்ற உறுதிமொழியுடன், ஐக்கிய நாடுகள் தினத்தை நாம் சிறப்பிப்போம்.

**ஜெ. மங்களதர்ஷினி**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ் பல்கலைக்கழகம்

# அரனார் மைந்தன் அழகன் முருகன் !




**ஆலயந் தோறும் அடியார் குவிவார்**
**அரனின் மைந்தனைப் பரவியே நிற்பார்**
**அகத்தில் இருக்கும் அழுக்குகள் அகல**
**அன்பாய் வேண்டி அனைவரும் நிற்பார்**

**அரக்க குணத்தை அழித்தவன் கந்தன்**
**இரக்க குணத்தில் நிறைவான் கந்தன்**
**உருக்க முடனே அழைத்தால் வருவான்**
**உண்மைப் பொருளே உமையின் மைந்தன்**

**வேலை ஏந்தினால் வினையை அறுப்பான்**
**வெற்றி கொடுப்பான் வீணரை ஒடுக்குவான்**
**அபயம் என்றால் அடைக்கலம் அளிப்பான்**
**அரனார் மைந்தன் அழகன் முருகன் !**



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

### பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல்:
# இண்டியா கூட்டணி வேட்பாளர்கள் 11 தொகுதிகளில் எதிரெதிர் போட்டி



பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் இண்டியா கூட்டணியில் உள்ள கட்சிகள், 11 தொகுதிகளில் ஒருவரை எதிர்த்து ஒருவர் போட்டியிடுகின்றனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.


பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் 2 ஆவது மற்றும் கடைசி கட்ட தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் கடந்த 20 ஆம் திகதியுடன் முடிந்தது. அப்போது, 11 தொகுதிகளில் இண்டியா கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் ஒருவரை எதிர்த்து ஒருவர் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர். இதனால் இண்டியா கூட்டணிக்குள் மோதல் அதிகரித்துள்ளது. அத்துடன் வாக்காளர்கள் மத்தியிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இண்டியா கூட்டணியில் உள்ள முக்கிய கட்சி ஆர்.ஜே.டி. 4 தொகுதிகளில் காங்கிரஸை எதிர்த்து போட்டியிடுகிறது. அதேபோல் வி.ஐ.பி. (விகாஸ் ஷீல் இன்சான்) கட்சியை எதிர்த்து 3 தொகுதிகளில் ஆர்.ஜே.டி. வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர். அதேபோல் சி.பி.ஐ. கட்சியை எதிர்த்து 4 தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

வைஷாலி, சிக்கந்தரா, ககல்காவ்ன், நர்கடியாகஞ்ச், ராஜாபகர், பச்வாரா, பிஹார்ஷெரீப், கர்கஹார், சைன்பூர், பாபுபர்ஹி, கவுரா பவுரா ஆகிய 11 தொகுதிகளில் இண்டியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் ஒருவரை எதிர்த்து ஒருவர் போட்டியிட உள்ளனர்.

இரண்டாவது கட்டத் தேர்தல் பிரச்சாரத்துக்கு 15 நாள்களுக்கு குறைவாகவே உள்ள நிலையில், இண்டியா கூட்டணி கட்சிகளின் பிரச்சாரத்தில் முக்கிய தலைவர்கள் பலர் பங்கேற்காமல் உள்ளனர்.

# காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவிழந்தது: இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்



வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவிழந்தது. இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுவிழக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவிழந்து குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறியுள்ளது. இது தமிழ்நாட்டின் வடக்கே நிலைகொண்டுள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து தெற்கு கர்நாடக பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுவிழக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வுப் பகுதி, ஏற்கனவே எதிர்பார்த்தபடி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையாததால், நேற்று முன்தினம் பல்வேறு மாவட்டங்களில் மழைப்பொழிவு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இண்டியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக ஆர்.ஜே.டி தலைவர் தேஜஸ்வி யாதவ் அறிவிப்பு

### பிரசாந்த் கிஷோர் விமர்சனம்




பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக ஆர்.ஜே.டி. தலைவர் தேஜஸ்வி யாதவ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதனை, ஜன் சுராஜ் கட்சியின் தலைவர் பிரசாந்த் கிஷோர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாகசெய்தியாளர்களிடம் பேசிய பிரசாந்த் கிஷோர்,

“லாலு பிரசாத் யாதவின் ‘காட்டாட்சி’ மீண்டும் வந்தால், தேஜஸ்வி யாதவ் முதல்வர் முகமாக இருப்பார் என்று எப்போதும் எதிர்பார்க்கப்பட்டது. எனவே, அதில் புதியது என்ன?” என்று கூறினார்.

முன்னதாக நேற்று பாட்னாவில் நடைபெற்ற இண்டியா கூட்டணியின் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில், தேஜஸ்வி யாதவ், காங்கிரஸ் மூத்த தலைவர் அசோக் கெலாட், இண்டியா கூட்டணியில் புதிதாக இணைந்துள்ள விஜபி கட்சியின் தலைவர் முகேஷ் சஹானி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செய்தியாளர்களிடம் பேசிய அசோக் கெலாட், “இந்த தேர்தலில் முதல்வர் வேட்பாளராக தேஜஸ்வி யாதவை நாங்கள் ஆதரிக்கிறோம். இங்கே அமர்ந்திருக்கும் நாங்கள் அனைவரும் இணைந்து இந்த முடிவை எடுத்துள்ளோம். அதேபோல், கூட்டணியின் துணை முதல்வர் வேட்பாளராக முகேஷ் சஹானி அறிவிக்கப்படுகிறார்.” என தெரிவித்தார்.

தேஜஸ்வி யாதவை முதல்வர் வேட்பாளராக அறிவித்ததை தேசிய ஜனநாயக கூட்டணி கடுமையாக விமர்சித்துள்ளது. பிஹார் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், மகா கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சி, ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்), இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா மற்றும் ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைமையிலான மகாகட்பந்தனில் காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் முகேஷ் சஹானியின் விகாஷீல் இன்சான் கட்சி ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சி பிஹாரின் 243 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்துள்ளது.





# அமெரிக்காவின் மொத்த ஆதரவையும் இஸ்ரேல் இழக்கின்ற நிலை ஏற்படும்

## ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையை இஸ்ரேல் சட்டப்பூர்வமாக இணைத்துக் கொண்டால், அமெரிக்காவின் மொத்த ஆதரவையும் இஸ்ரேல் இழக்கும் நிலை ஏற்படும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த முடிவை ஏற்கனவே துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் மற்றும் வெளிவிவகார செயலாளர் மார்கோ ரூபியோ ஆகியோரும் எதிர்த்து, இஸ்ரேலை எச்சரித்தனர்.

இஸ்ரேலின் இந்த நகர்வு ஒரு போதும் நிறைவேறப்போவதில்லை, அரபு நாடுகளுக்கு தாம் வாக்குறுதி அளித்திருப்பதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், இஸ்ரேல் தற்போது அதை முன்னெடுக்க முடியாது. அரேபிய நிர்வாகத்தின் ஆதரவு இந்த விவகாரத்தில் அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், பிடிவாதமாக இஸ்ரேல் அந்த முடிவுக்கு வரும் என்றால், கண்டிப்பாக அமெரிக்காவின் அனைத்து ஆதரவையும் இழக்கும் நிலை வரும் என்றார்.

அதுமட்டுமின்றி, இந்த ஆண்டு இறுதிக்குள் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை இயல்பாக்கும் ஆபிரகாம் ஒப்பந்தங்களில் சவூதி அரேபியாவும் இணையும் என்று தாம் நம்புவதாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இந்த மாத தொடக்கத்தில் ட்ரம்ப் மத்தியஸ்தம் செய்த காஸா போர்நிறுத்தத்தை வலுப்படுத்த, சமீபத்திய நாள்களில் இஸ்ரேலுக்கு உயர் அதிகாரிகளை அவர் அனுப்பியுள்ளார்.

ஆனால், மூன்று நாள்கள் இஸ்ரேல் பயணத்தை முடித்துக் கொண்டு வான்ஸ் நாடு திரும்பியதும் மார்கோ ரூபியோ இஸ்ரேலுக்கு பயணப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே மேற்குக் கரையை இணைப்பதற்கு வழி வகுக்கும் இரண்டு சட்டமூலங்களை இஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

இஸ்ரேலின் இந்த திடீர் நகர்வை கடுமையாக விமர்சித்த வான்ஸ், இது மிகவும் முட்டாள்தனமான அரசியல் தந்திரம், தனிப்பட்ட முறையில் தம்மை இஸ்ரேல் நிர்வாகம் அவமானப் படுத்தியதாக உணர்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

# இரண்டு எண்ணெய் நிறுவனங்கள் மீதான அமெரிக்காவின் நடவடிக்கை தீவிரமானது

## ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவிப்பு

ரஷ்யாவின் மிக முக்கியமான இரண்டு எண்ணெய் நிறுவனங்கள் மீதான அமெரிக்காவின் சமீபத்திய நடவடிக்கை தீவிரமானது என ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அந்த நகர்வு ரஷ்ய பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தல் அளிக்கும் வகையில் வலுவானதல்ல எனவும் புடின் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவின் இரண்டு பெரிய எண்ணெய் உற்பத்தியாளர்கள் மீது கடந்த புதன்கிழமை அமெரிக்கா அதிரடி நடவடிக்கை முன்னெடுத்தது.

இதில் Rosneft ரஷ்ய அரசாங்க எண்ணெய் நிறுவனம், மற்றொன்று தனியாருக்கு சொந்தமான Lukoil. இந்த நிறுவனத்திடம் இருந்தே இந்தியாவும் சில ஐரோப்பிய நாடுகளும் மலிவு விலையில் எண்ணெய் இறக்குமதி செய்து வருகின்றனர்.

ஜனாதிபதி பொறுப்புக்கு வந்ததன் பின்னர் ரஷ்யாவிற்கு எதிராக ட்ரம்ப் முன்னெடுக்கும் முதல் நடவடிக்கை இதுவாகும். இந்த நிலையில் செய்தியாளர்களை சந்தித்த ஜனாதிபதி புடின், “ரஷ்யாவிற்கு எதிராக அவர்கள் தீவிரமாக இருப்பது அமெரிக்காவின்



இந்த முடிவால் வெளிப்பட்டுள்ளது.

அவை சில விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உண்மை தான், ஆனால் ரஷ்யாவின் பொருளாதாரத்தை உலுக்கும் அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை.” என்றார்.

மட்டுமின்றி, இந்தத் தடைகள் ரஷ்யா-அமெரிக்க உறவுகளை வலுப்படுத்தாத ஒரு நட்பற்ற செயல் என்றும் அவர் கூறினார்.

ட்ரம்ப் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், சீனா மற்றும் ரஷ்யா மீது நட்பு ரீதியாக நடந்துகொள்ள முயற்சி மேற்கொண்டார்.

ரஷ்ய எண்ணெய் விவகாரத்தில் சீனாவும் இந்தியாவும் ஈடுபட்டிருக்க, இந்தியா மீது மட்டும் 25 சதவீத வரி விதித்தார். இதைப்போன்றே ரஷ்யாவுடன் உறவுகளை வளர்க்க முயன்றார்.

ஆனால் தனது மொத்த செல்வாக்கை பயன்படுத்தியும் புடின் போர் நிறுத்தத்திற்கு உடன்பட மறுத்து, பல்வேறு காரணங்களை பட்டியலிட்டார். இந்த விவகாரத்தில் உக்ரைனும் ஐரோப்பிய நாடுகளும் அழுத்தம் அளிக்கவே, ரஷ்யாவின் நடவடிக்கையில் ட்ரம்ப் கடும் அதிருப்தியடைந்தார்.

மட்டுமின்றி, புடினுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் எந்த பலனையும் தரவில்லை என ட்ரம்ப் விரக்தியடைந்தார்.

இந்த நிலையில், தாம் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தயாராக இருப்பதாகவும், மோதல் அல்லது எந்தவொரு தகராறையும் விட, குறிப்பாக போரை விட பேச்சுவார்த்தைகள் எப்போதும் சிறந்தது என்றும் புடின் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால் Tomahawk ஏவுகணைகளால் ரஷ்யா தாக்கப்படும் என்றால் பதிலடி வலுவானதாக இருக்கும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன் என்றும் புடின் எச்சரித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள்- 24.10.2025




உங்கள் அணுகுமுறையில் சிறிது கவனம் தேவை. உங்கள் பிரியமான வர்களுடன் பேசும் போது கவனமாகப் பேசவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். இதனால் நல்லுறவை உருவாக்க முடியும்.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

சளி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ள தால் ஒரு உரையாடலை தொடங்குமுன் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும். விட்டுக்கொடுக்கும் அணுகு முறை தேவை. சிறிய விஷயங்களை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் பணகளை சாமார்த்தியமாக அற்ற வேண்டும். இல்லையெனில் பணியில் தரத்தை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. தேவை யற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.சளி அல்லது முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உரிய சிகிச்சை மேற்கொள்ளவும்.




இன்று மகிழ்ச்சிகரமாக நாளாக இருக்கும். உங்கள் செயல்களை கவனமாக ஆற்றுவீர்கள். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறு வீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை சில கொள்கைகளுடன் ஆற்றுவீர்கள். உங்கள் செயல்திறன் நிரூபணமாகி வளர்ச்சி கிடைக்கும். உங்களுக்கு பாராட்டு கிடைப் பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் திருப்தி உண்டாகி உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். பணத்தை சேமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பயனுள்ள திண்டங்களில் முதலீடு செய்வீர்கள்.




இன்று காணப்படும் பதட்டத்தை சமாளிக்க சமநிலையான அணுகு முறை தேவை. திருப்தியான மன நிலை ஏற்பட மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். சகபணியாளர்கள் ஆதரவு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அவர்களோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் மனதில் ஏதோ இழந்தது போல உணர்வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று அதிக பண வரவு காணப்படாது. அப்படியே வந்தாலும் தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள்.

இன்று இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சையின் மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.




இன்று தேவையற்ற வாக்குவாதங் கள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகள் இன்று கடினமாக காணப்படும். சகபணியாளர்களின் எதிர்ப்பு உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

இன்று உங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே சூடான விவாதங்கள் ஏற்படலாம். நட்புடன் இருப்பது நல்லது.

நிதி வளர்ச்சியில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். முடிந்த அளவு சேமிக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்குக் கவலையை உண்டாக்கும்.பாதுகாப்பற்ற நிலை காரணமாக தலைவலி உயரமுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாவீர்கள்.




இன்று மகிழ்ச்சியான நாளாக காணப்படாது. என்றாலும் பொறுமை நன்மை தரும். எதையோ இழந்தது போன்ற உணர்வு உங்கள் மனதில் ஏற்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது சில தடைகளை எதிர் கொள்வீர்கள். உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது இன்று மிகவும் அவசியம்.

மகிழ்ச்சியை தக்க வைக்க இன்று நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நிதிநிலை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். திட்டமிடுவது அவசியம்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.ஓய்வாக அமைதியாக இருப்பது நல்லது.




இன்று சிறப்பான நாள். உங்கள் சுய முயற்சி மூலம் வளர்வீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதியின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பிறருடன் சிறப்பாக தொடர்பு கொள்வீர்கள்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாகக் கையாள்வீர்கள். நீங்கள் முறையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாகவும் உண்மையாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று வருமானம் அதிகமாகக் காணப்படும். சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வு காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று திருப்தியான நாளாக இருக்கும்.

உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். ஆடு உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை இரிக்கும். உங்கள் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக காரணமாக உங்கள் மீதான மதிப்பு உயரும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 24.10.2025




ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்டல், இறைவழிபாடு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் இன்று ஆறுதல் கிடைக்கும். உங்கள் பேச்சில் கவனம் தேவை. இன்று நண்பர்களை சந்திப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்றைய பணிகள் தள்ளிப் போகும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க புத்திசாலித்தனமாக பணிகளை ஆற்ற வேண்டும்.

இன்று நீங்கள் விரும்பும் மகிழ்ச்சி கிடைக்காது. உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது இருவருக்கும் இடையிலான உறவை பாதிக்கும் என்பதால் இதனை தவிர்த்தல் நல்லது.பயணத்தின்போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சமநிலையோடு காணப்படுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருடன் கலந்து பேசி மகிழ்வீர்கள்.

கடினமான பணிகளிக் கூட எளிதாகச் செய்வீர்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உண்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவு காணப்படும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.




இன்று எளிய பணிகளைச் செய்வது கூட கடினமாக உணர்வீர்கள். உங்கள் ஆற்றல் இழந்து காணப்படுவீர்கள். இதனால் விளைவுகளில் பாதிப்பு ஏற்படும். ஓய்வாக இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில அபாயங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும் பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. உறவின் நல்லிணக்கம் பாதிக்கும் வகையில் சில தேவையற்ற பேச்சுக்கள் ஏற்படலாம்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று நீங்கள் பணம் இழக்க நேரலாம்.

தொண்டை வலியால் அவதிப்படுவீர்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்..




இன்று அதிர்ஷ்டமான நாள். நீங்கள் மிகுந்த முயற்சி செய்து அதில் வெற்றியும் காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை சிறப்பாக ஆக்கு வீர்கள். உங்கள் சமயோசித புத்தி இன் றைய பணிகளை எளிதாக்கும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்கள் மனநிலை உங்கள் பணியில் பிரதி பலிக்கும்.

உங்கள் துணையிடம் உண்மையாக இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் இன்று வளர்ச்சி காணப்படும். லாபகரமான திட்டத்தில் இன்று நீங்கள் பணத்தை முதலீடு செய்யலாம். உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.



# நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் முட்டை விலையில் மாற்றமில்லை

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் முட்டை விலையில் மாற்றம் இல்லை என மஸ்கெலியா பிரதேச சபையின் உறுப்பினர் கருணாகரன் முரளி விசனம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டில் உள்ள சகல பாவனையாளர்களுக்கு வெள்ளை நிற முட்டை 18 ரூபாவுக்கும் சிவப்பு நிற முட்டை 20 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட உள்ளதாக கோழிப் பண்ணையாளர் சங்கத் தலைவர் ஊடகங்கள் ஊடாக கடந்த வாரம் கூறிய போதும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சகல வர்த்தக நிலையங்களில் தற்போது முட்டை 38 ரூபா முதல் 45 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பண்டிகை காலம் என்பதால் மத்திய மலைநாட்டில் ஆட்டிறைச்சி ஒரு கிலோ 3,000 ரூபா, மாட்டிறைச்சி 2,800 ரூபா, கோழி இறைச்சி 1,200 ரூபா, மீன் வகை 1,500 ரூபா முதல் 3,000 ரூபா வரை, கோழி முட்டை வெள்ளை 32 ரூபா, சிவப்பு நிற முட்டை 45 ரூபா முதல் 50 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட விலை கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி பாவனையாளர்களை பாதுகாக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். – என்றார் அவர்.